விழி உங்களிடம்
அதன்
ஒளி எங்களிடம்
எரிக் கணேஷ்
(மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்)
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
[34334]

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

விழி உங்களிடம்
அதன்
ஒளி எங்களிடம்
ERIC GANESH
OPTICIANS
566, HOSPITAL ROAD,
JAFFNA.
[34334]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 20 புதன்கிழமை (04 = 01 = 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 39



பேச்சுவார்த்தை மேசையிலே தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளும் அரசுத் தரப்புப் பிரதிநிதிகளும் எதிரெதிரே அமர்ந்திருக்கும் காட்சி. அரசுத் தரப்பு பிரதிநிதிகள் குழுத் தலைவர் பாலபட்டபெண்டியருகே தலைவர் திரு. வே. பிரபாகரனின் படங்களுடன் கூடிய எண்கோண பீடத்தில் தமிழீழத் தேசியக் கொடி காணப்படுகின்றது.

பேச்சுவார்த்தை பற்றிய மேலும் செய்திகள் 4,5,8 ஆம் பக்கங்களில்

# மோதல் தவிர்ப்புக்கு அரசு-புலிகள் உடன்பாடு

# அது போர் நிறுத்தம் உருவாக வழி வகுக்கும்!

## ஆரம்பத் திகதி குறித்து அரசு இன்று அல்லது நாளை அறிவிக்கும்

யாழ்ப்பாணம், ஜனவரி 4


ஸ்ரீலங்கா அரசாங்கப் படைகளும், விடுதலைப் புலிகளும் விரைவில் மோதல் தவிர்ப்பில் ஈடுபடுவர்.

நேற்று நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது இது சம்பந்தமாக இரு தரப்புகளுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டது.

ஆரம்பத்தில் இரண்டு வார கால மோதல் தவிர்ப்பை (Cessation of Hostilities) நடைமுறைக்குக் கொண்டு வருவது என்றும் — கட்டம் கட்டமாக அதனை நீடித்து, படிப்படியாக பூரண போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான வழி முறைகளை ஆராய்வது எனவும் — நேற்றைய பேச்சின் போது இணக்கம் காணப்பட்டது.

மோதல் தவிர்ப்பை எப்

(8 ஆம் பக்கம் பார்க்க)



ஹெலிக்கொப்டரில் இருந்து இறங்கிவரும் அரசுத் தரப்பு பிரதிநிதி கப்டன் பிரசன்னா ராஜரட்ன



அரச தூதுக்குழு பிரதிநிதி மேஜர் ஜெனரல் சிறி பீரிஸ் சென்ஜோன்ஸ் மைதானத்தில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளால் அழைத்து வரப்படுகின்றார்.

## அரச பிரதிநிதிகளுடன் நேற்றுக்காலை சென். ஜோன்ஸ் மைதானத்தில் ஹெலிக்கொப்டர் வந்து இறங்கியது!

யாழ்ப்பாணம், ஜன. 4

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக அரச தூதுக்குழு பிரதிநிதிகள் நேற்றுக் காலை 9-05 மணிக்கு ஹெலிக்கொப்டரில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் வந்திறங்கினர்.

நேற்றுக் காலை 7-30 மணிக்கு இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து விசேட விமானத்தில் புறப்பட்ட அரச குழுப் பிரதிநிதிகள், பலாலி விமான நிலையத்தை 8-30 மணியளவில் வந்தடைந்தனர்.

பலாலி படை அதிகாரிகளும், தளபதிகளும் பலாலி விமானத் தளத்தில் குழுவினரை வரவேற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கிருந்து ஹெலியில் புறப்பட்ட குழுவினர் சென். ஜோன்ஸ் கல்லூரி விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டிருந்த ஹெலி இறங்கு தளத்தில் சரியாக காலை 9-05 மணிக்கு வந்திறங்கினர்.

பலாலியில் இருந்து யாழ். நகருக்கு வடக்குப்பக்கமாக வந்த ஹெலி தாழப்பறந்து

(8ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாம் கட்டப் பேச்சு இம்மாதம் 14 இல்

அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

நேற்று நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது, விடுதலைப் புலிகளால் தெரிவிக்கப்பட்ட மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்கள் குறித்து கொழும்பில் அரசாங்க உயர்பீடத்துடன் கலந்தாலோசித்த பின்னர், அவை சம்பந்தமான முடிவுகளுடன் குழுவினர் யாழ்ப்பாணம் வருவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதே பிரதிநிதிகள் குழுவே மீண்டும் வரும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

## பேச்சின் கூட்டறிக்கை இன்று அல்லது நாளை

யாழ்ப்பாணம் ஜன.4

நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த அரசு — விடுதலைப் புலிகள் பேச்சுக்களின் விவரங்கள் அடங்கிய கூட்டறிக்கை ஒன்று இன்று அல்லது நாளை வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட மோதல் தவிர்ப்பு சம்பந்தமான விவரங்களும்— இரு சாராருக்கும் இடையில் நடந்த பேச்சு விவரங்களும்- உத்தேச கூட்டறிக்கையில் இடம்பெறும்.

## இரு படை அதிகாரிகளும் சீருடையில் வந்தனர்!

யாழ்ப்பாணம், ஜன. 4

நேற்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த யாழ். வந்த படை அதிகாரிகள் இருவரும் படையினருக்கான சீருடைகளை அணிந்து வந்திருந்தனர்.

இராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் சிறிபீரிஸ் இராணுவ சீருடையிலும்— கடற்படை அதிகாரி கப்டன் பிரசன்னா ராஜரட்ன, கடற்படை உயர் அதிகாரிகளின் முழுவெள்ளை சீருடையிலும்— வந்திருந்தனர்.

விமானப்படையின் ஹெலியில் வந்த இரு விமானிகளும் இராணுவச் சீருடையில் காணப்பட்டனர்.

அரச குழுவினரை இறக்கிவிட்ட ஹெலி தாழப் பறந்த

[8ஆம் பக்கம் பார்க்க]

## பேச்சு நடைபெற்ற மண்டபத்தில் தலைவரின் படம், தேசியக் கொடி!

யாழ்ப்பாணம்,ஜன. 4

சுண்டிக்குளியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை தலைமைச் செயலகத்தில் உள்ள மாநாட்டு மண்டபத்தில்—

தலைவர் பிரபாகரனின் படத்துக்கு முன்பாக—அமைக்கப்பட்டிருந்த நீள் வட்ட மேசையில்—

மேசைக்கு நடுவே தலைவர் பிரபாகரனின் படங்களுடன் கூடிய எண்கோண பீடத்தில் தமிழீழ தேசியக் கொடி பறக்க—

அரச தரப்பு பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளும் நேருக்கு நேர் அமர்ந்திருக்க—

நேற்றுக் காலை 9-30 மணிக்கு இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

அரச குழுவின் தலைவர் முதலிலும் அவரையடுத்து இராணுவ அதிகாரி சிறி பீரி

(5ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவின் விசேட பணிப்பில் யுத்தக் கைதிகள் 4 பேர் விடுதலை

யாழ்ப்பாணம், ஜன. 4

விடுதலைப் புலிகளின் காவலில் இருந்த நான்கு யுத்தக் கைதிகள் (பொலீஸார்) தலைவர் பிரபாகரனின் விசேட பணிப்பின்பேரில் நல்லெண்ண அடிப்படையில் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட 4 பொலீஸாரும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி மேரி போர்ஜின்ஸ்சிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட அவர்கள், யாழ். வந்த அரச குழுவினருடன் ஹெலிக்கொப்டரில் [illegible] மானார்கள்.

விடுதலையானவர்களின் விபரம் வருமாறு:-

★ பி. எஸ். பி. பண்டார— (29 வயது - கம்பளை)

★ ஜே. டி. தர்மசிறி—(29 வயது - பிபிலை)

★ எச். டி. விமால் சந்திரசிறி — (30 வயது - குளியாப்பிட்டிய)

★ எஸ். ஏ. அத்துக்கோறள (29 வயது - ராஜகிரிய)

(அ-3)

## யாழ்ப்பாணத்தை நவீன நகராக்கத் திட்டம்

### நவீன் குணரத்ன வெளியிட்ட தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 4

யாழ்ப்பாணத்தை நவீன நகரமாக மாற்ற முயற்சி எடுத்துள்ளோம். இந்தப் பிராந்தியத்திலேயே—ஆசியாவிலேயே — அதனை நவீன நகராக்கத் திட்டமிட்டுள்ளோம்—என்று யாழ். வந்த அரச தரப்புப் பிரதிநிதிகளில் ஒருவரான கட்டடக்கலைஞர் திரு.நவீன் குணரத்தின தெரிவித்தார்.

புனர்நிர்மாணப் பணிகளை விரைவில் ஆரம்பிக்க இருக்கிறோம். இது தொடர்பான திட்டங்களை விடுதலைப் புலிகளிடம் கொடுத்துள்ளோம். அடுத்த பேச்சில் அவை பற்றி ஆராய்வோம் என்றும் அவர் கூறினார்

நேற்றுப் பேசப்பட்ட விடயங்கள் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வரத் திட்டமிட்டிருந்தோம். ஜனாதிபதியின் செயலாளர் திரு. பாலபட்டபெண்டி சுகவீனமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார். நேற்று முன்தினமே (ஞாயிற்றுக்கிழமையே) அவர் ஆஸ்பத்திரியில் இருந்து வந்தார்—என்றும் திரு. நவீன் உதயனுக்குத் தெரிவித்தார்.

## சென்னை மாநாட்டில் ஈழ அறிஞர்கள் கைது!

கொழும்பு, ஜன. 4

எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தமிழகம் சென்றிருந்த —

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் உட்பட ஈழத்து தமிழறிஞர்கள் சிலர் தமிழகத்தில் கைது செய்யப்பட்டு நேற்று இலங்கைக்கு நாடு கடத்தப்படவிருந்ததாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

கைதானவர்களில் ஒருவர் கோப்பாய் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் காரை செ சுந்தரம்பிள்ளை என சிங்கள செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

தமிழில் ஈடுபாடு கொண்

[5ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனி விலை குறையாமல் இருப்பதற்கு கூ. மொ. வி. நிறுவனமே காரணமாம்

## கேள்விப்பத்திரத்தை ஏற்பதில் மோசடி

கொழும்பு, ஜன. 4

ஒரு கிலோ சீனியை சில்லறைக்கு 25 ரூபாவுக்கு விற்கக் கூடியதாக இருக்கும்போது கூ. மொ. வி. நிறுவனம் அதனை 30 ரூபாவுக்கே விற்கக் கூடியதாக இருக்கிறது.

கேள்விப் பத்திரங்கள் ஏற்பதில் இடம் பெற்றுவரும் மோசடிகளே இதற்குக் காரணம் என்று 'ராவய' பத்திரிகை தெரிவிக்கிறது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:

25ஆயிரம் மெற்றிக் தொன் சீனியை கடந்த டிசம்பரில் இறக்குமதி செய்வதற்கு கூ. மொ. வி. நிறுவனம் கேள்விப் பத்திரங்களைக் கோரியிருந்தது.

சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களில் ஒரு கேள்விப் பத்திரத்தில் குறிக்கப்பட்டிருந்த விலையின்படி அக் கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் ஒரு கிலோ சீனி கொழும்புத் துறை முகத்தை வந்தடைய 16ரூபா 50 சதம் மட்டுமே செலவாகும். ஆனால் இந்தக் கேள்விப்பத்திரத்தை ஏற்காமல் கொழும்புத்துறை முகத்தை வந்தடைய 19ரூபா 50 சதம் செலவாகும் கேள்விப் பத்திரமே ஏற்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மொத்த வியாபாரிகளின் தேவைகளுக்கு இணங்க பொருள்களின் விலைகளை உச்ச அளவில் தீர்மானிப்பதையே கூ. மொ. வி. நிறுவனம் வழக்கத்தில் கொண்டிருந்தது. இவ்வழியில் கூ. மொ. வி. நிறுவனத்தைச் சேர்ந்த முக்கியத்தர்கள் கோடிக்கணக்கில் சம்பாதித்துள்ளனர்.

லண்டன் சந்தையில் ஒரு மெற்றிக் தொன் சீனியின் விலை 450 டொலராகும்.

இந்த விலையானது வழமையான விலை அல்லவெனவும் —

தரகர்களால் உருவாக்கப்பட்ட செயற்கையான விலை எனவும் —

ஏனைய சந்தைகளில் (நாடுகளில்) இவ்விலையிலும் பார்க்க மிகவும் குறைந்த விலையில் சீனியை கொள் முதல் செய்ய முடியுமெனவும் — விஷயமறிந்தவர்கள் கூறுகின்றனர்.

கூ. மொ. வி. நிறுவனத்திற்கு பல்வேறு பொருள்களை வழமையாக இறக்குமதி செய்து வழங்கும் விநியோகத்தர் ஒருவர் ஒரு மெற்றிக் தொன்சீனிக்கு 450 அமெரிக்க டொலரை விலையாகக் குறிப்பிட்டிருந்தார். அதே சமயம் மற்றொரு விநியோகத்தர் 330 அமெரிக்க டொலரை குறிப்பிட்டிருந்தார்.

இருப்பினும் கூ. மொ. வி. நிறுவனம் உச்சவிலை குறிப்பிடப்பட்டிருந்த கேள்விப் பத்திரத்தையே ஏற்றது.

உரிய முறையில் கேள்விப் பத்திரங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டிருந்தால் ஒரு கிலோ சீனி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைய 16-50 மட்டுமே முடிந்திருக்கும்.

ஒரு கிலோவிற்கு சுங்க வரியாக 3 ரூபாவும் மொத்த விற்பனை வரியாக 1ரூபா 60 சதமும், ஏனைய செலவுகளாக 1 ரூபா 90 சதமும் செலவாகிறது.

மொத்தத்தில் ஒரு கிலோ சீனிக்கு கூ. மொ. வி. நிறுவனத்திற்கு 23 ரூபா முடிகிறது. இச்சீனியை 25 ரூபாவிற்கு சில்லறைக்கு விற்க முடியும்.

கேள்விப்பத்திரங்களில் ஏற்படும் தில்லுமுல்லுகளினால் பல கோடி ரூபா சீனிக்கு மேலதிகமாகச் செலவிடப்படுகிறது. (இ-10)

## 3 ஆயிரம் பனம் விதை நடுகை

கற்பகச்சோலைத் திட்டத்தின் கீழ் வலயன்மடம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் அமைக்கப்பட்ட பனம் பண்ணையில் 3,000 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. (ஒ)


மகளிருக்கான

மனைப்பொருளியலும், கைத்திறனும்

**டிப்ளோமா பயிற்சிகள்**

* கேக் ஐசிங்
* உடைதயாரித்தல்
* உணவு தயாரித்தல்
* பூ வேலை
* கை வேலை

புதிய கிழமை நாள் பயிற்சிகள்

ஆரம்பம்: 16-01-95

புதிய சனி, ஞாயிறு பயிற்சிகள்

ஆரம்பம்: 21-01-95

**கலாலயா**

(தொழிற் பயிற்சியகம்)

விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.

(ஆஸ்பத்திரியின் பின் வீதி) (சி/105



**RADIO & ELECTRONIC TECHNICIAN COURSE**

காலம் 4 மாதம்

* மிகக் குறைந்த தவணைக் கட்டணம்
* விசேட செய்முறைப் பயிற்சிகள்
* இலகு விரிவுரைகள்
* பயிற்சி முடிவில் தகுதிவாய்ந்த சான்றிதழ்

ஆரம்பம்: 09-01-1995

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14St, PETER'S LANE,
JAFFNA. (சி-106)


## பீடாரோகண வாழ்த்து

இன்று நடைபெறும் இந்துமத குருபீடாரோகண விழாவில் நாயகர் சிவாகம சிரோமணி, வித்தியாசாகரம், சிவபூஜா துரந்தர், கலாநிதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்களை வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி மூர்த்தி கோயில்
வண்ணார்பண்ணை வட- மேற்கு.

சி. செல்லையா
தலைவர்
நிர்வாக சபை சார்பாக.

(34503)


**PERSONAL CLASS**

இல. 14,
சிறாம்பையடி லேன்,
யாழ்ப்பாணம்.

**A/L 95**

கணக்கியல்
மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்:
05-01-1995
(வியாழன்)
பி. ப, 6-30மணி

By
A. S. A. கலைச்செல்வன்

[34509]


## பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில் மார்கழி மாத கொடியேற்றத் திருவிழா

**4-1-1995**

பொன்னாலைக் கடலோரம் பொங்குதமிழ்க் கரையோரம்
கண்ணாளன் கண்ணனுக் கோர் திருக் கோயில்
அவன் என்னாளும் எழுந்தருளும் எங்களின் தலத்தோரம்
கண் கொள்ளாக் காட்சி தரும் அவதாரம்
பல தரம் அவன் பாதம் பணிந்தெளும் அடியார்க்கு
நலந்தரும் வரந்தரும் இறையோடும்
இது சிதேவி பூ தேவியோடு கண்ணன் தினம் தோன்றும்
கண்ணாளன் கண்ணனின் பொன்னாலைக் கோயில்

ஆக்கியோன்: மூளாயூர் ஆசுகவி, சிவசுப்பிரமணியம்

(34506)


**DAY CLASS 95**

பகல் நேர வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| கணிதம் திரு. சங்கர் | | விஞ்ஞானம் திரு. இரா. செல்வவடிவேல் |
| தமிழ் திரு. ஆர்த்திகன் | ஆங்கிலம் திரு. கிரிதரன் | சமூகக்கல்வி திரு. சுபேசன் |
| வர்த்தகம் திரு. அற்புதராஜா | சைவசமயம் திரு. கிரிதரன் | கிறிஸ்தவம் திரு மகேஸ்வரன் |

ஆரம்பம் 05-01-1995
(வியாழன் காலை 8மணி)

(அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்)

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி/2..)


## கண்ணீர் அஞ்சலி

**அமரர் க. இளையதம்பி**

(அதிபர் - அ.த.க. பாடசாலை, கைதடி, நுணாவில்)

கடமை, கண்ணியம்,கட்டுப்பாடு மிக்க அதிபர்
க, இளையதம்பி அவர்கள்

02-01-1995 இல் இறைவனடி சேர்ந்ததையிட்டு மிகமிக வருந்துகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மட்டுவில் மாதர் சங்கம்,
கிராம அபிவிருத்திச் சங்கம்,
சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கம்.

(34515)


## விரிவுரையாளர்கள் /ஆசிரியர்கள் உடன் தேவை

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப் பிரிவு
464 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**G.S.Q./G.C.E.(A/L)**

வகுப்புகளுக்குப் பின்வரும் பாடங்களுக்கான விரிவுரையாளர்கள் / ஆசிரியர்கள் தேவை. கிழமை நாட்களில் கடமையாற்றக் கூடிய பட்டதாரிகள்/இறுதியாண்டு பரீட்சைக்குத் தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்,

1. விலங்கியல்
2. பௌதிகவியல்
3. தாவரவியல்

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை **10-01-1995** அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ அனுப்பி வைக்கவும்.

— இயக்குநர்

(சி-259)



**G.S.Q.** (வெளிவாரி)

(கல்வியாண்டு 95 - 96)
(பேராதனை பல்கலைக்கழகம்)

Pure Maths, Applied Maths — காங்கேயபிள்ளை
Geography — க. குணராஜா, எஸ். சண்முகராஜா

ஆரம்பம்: 07-01-1995
(சனி காலை 9 மணி)

விவரங்களையும்,
விண்ணப்பப் படிவங்களையும் நேரில்
பெற்றுக் கொள்ளவும்.

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

[சி-257]



## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள, சமீபத்தில் முற்றிலும் புதுக்கித் திருத்தப்பட்ட நிலையில் உள்ள, 'ஒக்ஸ்போர்ட்'' (ஒரிஜினல்)டீசல் கார் விற்பனைக்கு உண்டு.

212/1, கோயில் வீதி,
(கைலாச பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக)
நல்லூர். (சி/10145)


## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**அல்பிறட் சிங்கராயர் மார்ட்டின்**

(பாதுகாப்பு அதிகாரி, மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை, யாழ்ப்பாணம்)

01-01-1995 இல் அமரத்துவம் அடைந்த அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரது மறைவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

* நியூ ஸ்ரான்லீஸ்
* முருகன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
* ஜெகன் போட்டோ
* நியூ சுபமாலா மோட்டோஸ்
* சதாஸ் மோட்டோஸ்
* செல்வா ஹாட் வெயர்ஸ்
* வி. கே. இராசரெத்தினம் & சன்ஸ்

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம், [34514]

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**அல்பிரட் சிங்கராயர் மார்ட்டின்**

(மக்கள் வங்கி, யா/ ஸ்ரான்லி வீதிக் கிளை பாதுகாப்பு உத்தியோகத்தர்)

01-01-1995 அன்று திடீரெனக் காலமாகிய
திரு. மார்ட்டின்
அவர்களது மறைவு
எமது மக்கள் வங்கி பாதுகாப்புப் பகுதிக்கு
மாபெரும் இழப்பாகும்.


அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வடபிராந்திய மக்கள் வங்கி
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.

பிரதேசத் தலைமைக் காரியாலயம்,
மக்கள் வங்கி, யாழ்ப்பாணம். (34513)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 07 — 1912



மறைவு: 17 — 12 — 1993

**சின்னையா இலட்சுமி**

திதி: 04 - 01 - 1995

தாயாகவும், தந்தையாகவும் இருந்து எங்களை வழிநடத்திய தெய்வமே! ஆண்டொன்று சென்றாலும் உமது அன்பு எங்களை விட்டு மறையவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் உங்கள் நினைவுடன் பிரார்த்திக்கும்;

பிள்ளைகள்
ஸ்ரீ முருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகள்
(ஸ்ரீ முருகன் அருள் நிலையம், மானிப்பாய்)
சி. இராசு [(C.T.B. - ஓய்வுபெற்றவர்)]
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர், மைத்துனிகள்.

லோட்டன் வீதி,
மானிப்பாய். (8180)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றச் சென்ற

# சிவத்தம்பி, சண்முகதாஸ் தம்பதியர் தமிழகத்தில் கைதாகி நாடு கடத்தல்!

## ஜப்பானிய பல்கலைக்கழக கோட்டாவில் சென்றவர்கள்

கொழும்பு, ஜன. 4

தஞ்சாவூரில் நடைபெறும் 8ஆவது தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பியும் மற்றுமிருவரும் தமிழக பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு நேற்று நாடு கடத்தப்பட விருந்ததாக கொழும்புப் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டன.

மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த பேராசிரியர் கா. சிவத்தம்பியும் மற்றும் கணவன், மனைவியாகச் சென்ற இருவரும் சென்னைப் பொலிஸாரினால் நேற்று முன்தினம் தடுத்து வைக்கப்பட்டனர் என்றும் —

அவர்கள் நேற்று இலங்கைக்கு நாடுகடத்தப்பட விருந்ததாகவும் — அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் ஜப்பானிய பல்கலைக்கழகம் ஒன்றின் சார்பில் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து சிரேஷ்ட விரிவுரையாளர் நா. சுப்பிரமணிய ஐயர் கலாசார அமைச்சின் சார்பில் சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-3)

## "ஓட்டோ"வுக்கு கிராக்கி

கொழும்பு, ஜன. 4

கொழும்பில் ஓட்டோக்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

முன்னர் என்றால் பணம் செலுத்தி உடனேயே ஓட்டோவைக் கொள்வனவு செய்யமுடியும் என்றும்—

தற்போது இரண்டரை மாதம் வரை காத்திருக்க வேண்டி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஓட்டோவுக்குப் பணம் செலுத்தி விட்டு சுமார் ஆயிரம் பேர் வரை காத்திருப்பதாக கொழும்பில் உள்ள மோட்டார் இறக்குமதிக் கம்பெனி ஒன்று தெரிவிக்கிறது.

தற்போது ஒரு 'ஓட்டோ' வின் விலை 1 லட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## அடையாள அட்டை பிரச்சினையால்

# குஜராத் அருணாச்சல் பிரதேச மாநிலங்களில் தேர்தல் ஒத்திவைப்பு

புதுடில்லி, ஜன. 4

புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை உள்ளவர்கள் தான் வாக்களிக்க முடியும் என்ற இந்திய தேர்தல் கமிஷனின் உத்தரவை அடுத்து இரு மாநில சட்டசபைத் தேர்தல்கள் பின்போடப் பட்டுள்ளன.

வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் வேலைகள் பூர்த்தி அடையாததே தேர்தல்களை ஒத்தி வைக்கக் காரணம் ஆகும்.

குஜராத் அருணாச்சல் பிரதேச மாநில சட்டசபைத் தேர்தல்களே ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

குஜராத்தில் பெப்ரவரி 4ஆம்,8ஆம் திகதிகளில் தேர்தல் நடைபெற இருந்தது. அருணாச்சல் பிரதேசத்தில் பெப்ரவரி 4 ஆம் திகதி தேர்தல் நடைபெற இருந்தது.

குஜராத் மாநிலத் தேர்தல் பெப்ரவரி 20ஆம் 25ஆம் திகதிக்கும்—

அருணாச்சல் பிரதேச தேர்தல் மார்ச் 11ஆம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னர் சகல வாக்காளர்களுக்கும் அடையாள அட்டை விநியோகித்து முடிக்க இந்திய தேர்தல் கமிஷன் தேர்தல் நடக்கும் மாநிலங்களுக்கு காலக்கெடு விதித்துள்ளது.

இதற்கிடையில் வாக்களிக்கும் தமது உரிமையை அடையாள அட்டைச் சட்டம் மூலம் தடுப்பதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. (இ)

## ஜனாதிபதி மாளிகையை பிடிக்கும் முயற்சி தோல்வி

### செசின்யாவில் கடும் சண்டை

குறொஸ்னி, ஜன. 4

செசின்யாவின் தலை நகரான குறொஸ்னியில் உள்ள ஜனாதிபதி மாளிகையைப் பிடிக்கும் முயற்சியில் ரஷ்யப் படைகள் தோல்வி கண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

குறொஸ்னி மீது கனரக டாங்கிகள், விமானங்களின் உதவியுடன் ரஷ்யப் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

செசின்யப் படைகளுக்கும் ரஷ்யப் படைகளுக்கும் இடையில் பல இடங்களில் வீதிச் சண்டைகள் மூண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கடந்த சில தினங்களாக தலைமறைவாகியிருந்த செசின்யப் பிரிவினைவாதத் தலைவர் டுடயேவ் நேற்று செசின்ய டெலிவிஷனில் தோன்றி யுத்த நிறுத்தம் செய்யுமாறு ரஷ்யாவுக்கு வேண்டுகோள் விடுத்தார். (இ)

## கரவைக் கந்தசாமி கொலை:

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்கலை மாணவி ஒருவரும் தேடப்படுகிறாராம்!

கொழும்பு, ஜன. 4

கரவைக் கந்தசாமி கொலை தொடர்பாகத் தேடப்படுவோரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவியும் ஒருவர் என்று நேற்றைய "ஐலண்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புளொட் அமைப்பின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உப தலைவரான கரவைக் கந்தசாமி கடந்த சனிக்கிழமை தெஹிவளையில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இக் கொலை தொடர்பாக கொழும்பில் பொலீஸார் பெரும் தேடுதல் நடவடிக்கை ஆரம்பித்திருப்பதாகவும்—

கொலையாளிகள் பயன்படுத்திய "ஓட்டோ" ஒன்று அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# கொள்ளையர் மீது சூடு; தெற்கில் இருவர் பலி

கொழும்பு, ஜன. 4

நகைக்கடை ஒன்றில் கொள்ளை அடித்துக் கொண்டு தப்பிச் செல்ல முயன்ற ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றின் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் கொல்லப்பட்டனர்,

இந்தச் சம்பவம் தென் பகுதியில் உள்ள அத்துறுக்கிரிய என்ற இடத்தில் இடம் பெற்றது. (இ-எ)

# 50கோடிரூபாபெறுமதியான இலவசப் பாடப் புத்தகங்கள்!

## அக்குரஸ்ஸவில் தேசிய விழா 10இல்

அடுத்தவருடம் பாடசாலை மாணவர்களுக்கு 50 கோடி ரூபா பெறுமதியான புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட விருப்பதாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் இலவசபாடப் புத்தகங்களுக்கு செலவிடும் தொகையிலும் பார்க்க இம்முறை 10 கோடிரூபா கூடுதலாக செலவிடப்படவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இம் முறை கூடுதலாக 12 லட்சம் புத்தகங்கள் அச்சிடப் பட்டுள்ளதாகவும்—

புத்தகங்களை விநியோகிக்கும் தேசியவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி அக்குரஸ்ஸவில் நடைபெறும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## தபால் பகுதியின் தமிழ் கொலை

கொழும்பு, ஜன 4

ஸ்ரீலங்கா தபால் பகுதியின் முத்திரைப் பணிபகம் சமீபத்தில் வெளியிட்ட முதல் நாள் உறைகளில் "முதல் நாள் உறை" என்ற சொல்லுக்குப் பதிலாக "முதல் நான் உறை" என்று அச்சிடப்பட்டுள்ளது.

நத்தாரை முன்னிட்டு வெளியிட்ட முதநாள் உறையில் மட்டும் அல்ல, அதன் பின் வெளியிட்ட ஒகிட்வட்ட வைரவிழாவை ஒட்டிய முதல் நாள் உறையிலும் இதே தவறுவிடப் பட்டுள்ளது. (இ-க)

## உண்ணாவிரதமிருக்க முயன்ற தமிழறிஞர் கைது

சென்னை, ஜன. 4

தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை அமுல் நடத்தக் கோரி தஞ்சை உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறும் பகுதியில் உண்ணாவிரதம் இருக்க முயன்ற தமிழ் அறிஞர்களும் அவரது ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுதலை செய்யுமாறு எம். ஜி. ஆர் — அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் திரு. எஸ் திருநாவுக்கரசு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர்கள் கைது செய்யப் பட்டதற்கு இவர் கண்டனமும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் நேற்று முன் தினம் தமிழாராய்ச்சி மாநாட்டில் 100 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

20 ஆம் நூற்றாண்டின் தமிழ் கவிஞர்கள் பற்றிய கவி அரங்கமும் பண்டை இலக்கியம் பற்றிய கருத்தரங்கும் நடைபெற்றன.

## குற்றாலீஸ்வரன் சாதனை

தமிழ் நாட்டைச் சேர்ந்த 14 வயது இளம் நீச்சல் வீரன் குற்றாலீஸ்வரன் ஒரு ஆண்டில் 6 கடற்பகுதிகளை நீந்திக் கடந்து சாதனை நிகழ்த்தி உள்ளார்.

இவர் கடந்த30 ஆம் திகதி அந்தமான் கடலை நீந்திக் கடந்தார்.

இதற்கு முன் 1966 ஆம் ஆண்டு மிகிர் சென் என்பவர் ஒரே ஆண்டில் 5 கடற்பகுதிகளை நீந்திக் கடந்து சாதனை நிகழ்த்தி இருந்தார்.

28 ஆண்டுகளின் பின்னர் இவரது சாதனை தற்போது முறியடிக்கப்பட்டிருக்கிறது.

குற்றாலீஸ்வரன் வயது குறைந்தவராக இருப்பதால் சர்வதேச நீச்சல் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1996 ஆம் ஆண்டிலேயே அவர் பங்கு பற்ற முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)


## இந்துமத "குருபீடாதிபதி" அவர்களின்

# பீடாரோஹண விழா சிறப்பு மலர்

## 'கலாநிதி' சிவபிரம்மஸ்ரீ 'அருள்ஜோதி' ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்

### குருபீடாதிபதி:

நல்லூர் ச. ஸ்கந்த தாசக் குருக்கள் தர்மாம்பாள் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரராக 07-08-1922 ஆம் ஆண்டு நல்லூரில் பிறந்தவர். யாழ். பரமேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர் வேதம், ஆகமம், ஜோதிடம், மாந்திரீகம், சிற்பம் போன்ற சாஸ்திரங்களை கற்றறிந்தவர் புராணங்களுக்கு பயன் சொல்லும் பௌராணிகர், இலங்கை அரசால் 1949 இல் "மாந்திரீகபூஷனா" விருது பெற்றவர். சென்னை ஹோமியோபதிக் கல்லூரியில் M. I. H பட்டமும் திருவார் ஹோமியோபதி இன்ஸ்ரிரியூட்டில் M. D. H பட்டமும் சித்த ஆயுர்வேத கல்லூரியில் D. A. M (இலங்கை) பட்டமும் பெற்றவர்.


1960 இல் ஆபஸ்தம்ப பூர்வ பிரயோகம் - 1 ஆம், 2 ஆம் பாகங்களாக வைதீகநூல் பொழிப்புரை, பதவுரையுடன் எழுதி வெளியிட்டவர் இந்தியாவில் தஞ்சாவூர் மாணிக்க விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை நடத்தியவர். இலங்கையில் நூற்றுக் கணக்கான கும்பாபிஷேகம், மஹோற்சவம், ஆசார்ய அபிஷேகம் முதலியவற்றை பிரதம குருவாகவும், போதகராகவும் நிகழ்த்தியவர் சிறந்த சமயப் பேச்சாளராய்த் திகழ்பவர். நித்யாக்னி நித்ய சிவபூஜை நடத்தி வருபவர் "சிவாகம சிரோமணி" வித்யாசாகரம், சிவாகம கிரியா சிம்மம், சாஸ்திரார்த்த ஜோதி என பல பட்டங்கள் பெற்றவர்.

### அருள் ஆசிச்செய்தி

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ சந்திரசேகர ஜெஜேந்திரசுவாமிகள்

இலங்கையில் இந்துமத குருபீடாதிபதியாக கலாநிதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் தெரிவு செய்யப்பட்ட செய்தி கேட்டு மகிழ்ச்சியடைகிறோம். இலங்கைத் திருநாட்டில் இந்து மதம் மென்மேலும் தழைத்து ஆன்மீகநெறி சிறக்க ஆசிர்வதிக்கிறோம். நாடும், மக்களும் ஷேமமுற பரமேஸ்வரனை பிரார்த்திக்கின்றோம்.

[34507]



★ குரு பீடாதிபதி ★

இந்துமத குருமார்களால் குருபீடாதிபதியாக தேர்வு செய்யப்பட்ட நல்லூர் நாயன்மார்கட்டு சிவபிரம்மஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்களின் பீடாரோஹண விழா இன்று [04-01-1995] புதன்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் பகல் 1-30 மணிக்கு நடைபெறுகிறது. சமயப் பெரியார்கள், அறிஞர்கள், சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

அனைத்து இந்து மக்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

[illegible] க்கள்

இந்துமத குருமார் ஒன்றியம், [illegible] தலைவர்.

யாழ். [illegible] இலங்கை.

### மேலும் ஆசியும், வாழ்த்துச் செய்தியும் அனுப்பிய பெரியோர்கள்:

★ காஞ்சி - 70-வது (சின்னவர்) விஜேந்திர சரஸ்வதி சுவாமிகள்
★ சென்னை -' சிவாச்சார்யகுலபூஷணம்'', டாக்டர் சிவ. சாம்பமூர்த்தி சிவாச்சார்யார்
★ கோப்பாய் - சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக்குருக்கள் ('சித்தாந்த பானு')
★ அவுஸ்ரேலியா-சிவாகம கலாநிதி சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள்
★ புலவை - சிவஸ்ரீ ஐ. வைத்தியநாதக்குருக்கள் (ராசாக்குருக்கள்)
★ கொழும்பு - "சிவாகமபூஷணம்" சிவஸ்ரீ சாமி. விஸ்வநாதக்குருக்கள்
★ கொழும்பு - "சிவாகம வித்வான்" சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்
★ சென்னை - சுகப்பிரம்மம் ராமசுவாமி சாஸ்திரிகள்
★ கொழும்பு - பிரம்மஸ்ரீ பா. சண்முகரெட்ணசர்மா J. P.
★ நல்லூர் - ஞானசம்பந்தர் ஆதீன சுவாமிகள்
★ கலாநிதி பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணஐயர் (யாழ். பல்கலைக்கழகம்)
★ டண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (துர்க்காபுரம்)
★ யாழ். சிவானந்தகுருகுலம் - நீராவியடி
★ இணுவில் - தர்மசாஸ்த்தா குருகுலம் காயத்திரிபீடம்
★ நல்லூர் - இந்து சமயப் பேரவை
★ நல்லூர் - இந்து இளைஞர் பேரவை

மற்றும் குருமார்கள், ஆலய நிர்வாகங்கள், அறிஞர்கள்.

### பாராட்டுரை வழங்குபவர்கள்:

★ பேராசிரியர் வி. சிவகாமி அவர்கள் பல்கலைக்கழகம் (சமஸ்கிருதத்துறை)
★ "இயலிசை வாருதி" பிரம்மஸ்ரீ க. வீரமணி ஐயர் அவர்கள் (இணுவில்)
★ கானகதாவாருதி பிரம்மஸ்ரீ. வை. நித்யானந்தசர்மா ஆசிரியர்
★ வித்வான் க. சொக்கலிங்கம் (சொக்கன்)
★ சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் (விரிவுரையாளர்)
★ திரு. ஆ. மகாலிங்கம் A. G. A. (இந்து சமயப் பேரவை)
★ சிவதர்ம வள்ளல் க. கனகராஜா J. P
★ "நியாயவாதி" சி. கனகரட்ணம் J P
★ ஸ்ரீலஸ்ரீ. கை. திருஞானசம்பந்த குருக்கள் (கரணவாய்)
★ சிவஸ்ரீ தா. வாசுதேவக்குருக்கள்
★ சிவஸ்ரீ கு. குமாரக்குருக்கள் (நல்லூர்)
★ திருமதி மங்கையர்க்கரசி திருசிற்றம்பலம்
★ சிவஸ்ரீ கை. இராஜேஸ்வரக்குருக்கள் (ஆசிரிய ஆலோசகர்)
★ பிரம்மஸ்ரீ ம. ஜெயராமசர்மா B. A. (ஆசிரிய ஆலோசகர்)
★ சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் (மட்டுவில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் கூறியபடி சமாதான நடவடிக்கை கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படவேண்டும்

## நேற்றைய பேச்சுவார்த்தை ஆரம்பத்தில் தமிழ்ச்செல்வன் உரை

யாழ்ப்பாணம், ஜன. 4

எமது தலைவர் கருத்துத் தெரிவித்தவாறு முழு சமாதான நடவடிக்கைகளும் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படவேண்டும்.

—இவ்வாறு நேற்று அரசு—புலிகள் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்தில் உரையாற்றிய புலிகள் பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளருமான திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார் அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு வருகை தந்துள்ள உங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

இன்றைய பேச்சுவார்த்தைகள் ஆக்கமுள்ளவைகளாகவும் அர்த்தமுள்ளவைகளாகவும் இருந்து, இருபகுதியினரிடையே நல்லெண்ணத்தை வளர்க்குமென்று நான் மனதார நம்புகின்றேன்.

ஒக்டோபர் நடுப்பகுதியில் நடந்த முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் பின்னர் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு தாமதம் ஏற்பட்டது ஒரு துரதிர்ஷ்டமான விடயம். அப்படியிருந்தும் எங்களது தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களிற்கும் உங்களுடைய அரசுக்கும் மத்தியில் கிரமமான கடிதப் போக்குவரத்துக்கள் நடைபெற்றன.

அவை மூலம் பல முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இரு பகுதியினருக்குமிடையில் திருப்திகரமான முறையில் விளக்கங்கள் தரப்பட்டன.

### எங்கள் கருத்து

தமிழர் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பது சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முக்கிய நோக்கமென்பது எங்களது கருத்தாகும். இப்பிரதான விடயம் பற்றி எங்கள் மத்தியில் எவ்வித தப்பபிப்பிராயங்களும் இல்லை.

எமது தலைவர் கருத்துத் தெரிவித்தவாறு முழு சமாதான நடவடிக்கைகளும் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படவேண்டும்.

பேச்சுவார்த்தைகளின் ஆரம்ப கட்டத்தில் மக்கள் எதிர்கொள்ளும் உடனடி அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காணப்படவேண்டும்.

பேச்சுவார்த்தையின் ஆரம்ப கட்டத்தில் இந்த விடயங்களுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டுமென்று நாங்கள் உங்களுடன் தொடர்பு கொண்ட கடிதங்கள் மூலம் தெளிவாக விளக்கியுள்ளோம் நீண்ட தொடர்ச்சியான போரினாலும் முன்னைய அரசாங்கம் கடைப்பிடித்த ஒடுக்குமுறைக் கொள்கைகளாலும் வடகிழக்கில் வாழும் தமிழ்மக்கள் பாரதூரமான கஷ்டங்களுக்கு இலக்காகி உள்ளார்கள். போரினால் ஏற்பட்ட சாவுகள், அழிவுகள் ஒருபுறமிருக்க. தடைகள் — பொருளாதாரத் தடைகள் — கட்டுப்பாடுகள் —போன்றவற்றை அரசாங்கம் திணித்ததால் பாரிய கஷ்டங்கள் ஏற்பட்டதுமல்லாமல் அன்றாட வாழ்க்கையின் இயல்பு நிலையையும் பெருமளவில் சீர்குலைத்துள்ளது.

### திடசங்கற்பம்

இந்தக் கஷ்டங்களும் ஒடுக்குமுறைகளும் முன்னைய அரசாங்கத்தால் தமிழ் மக்களின் மனவுறுதியை உடைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். ஆனால் தமிழ்மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளார்கள்.

அந்த ஒடுக்குமுறைக் கொள்கைகள் பெருமளவு கஷ்டங்களை கொடுத்தாலும் அக்கொள்கைகளின் நோக்கங்களை நிறைவேற்ற முடியாது போயிற்று. இராணுவ ஒடுக்குமுறைக்கொள்கைகள் தேசிய இனப்பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன.

17 வருடகால அநீதியான ஐக்கியதேசியக் கட்சியின் ஆட்சிக்குப் பின்னர் இனப்பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வொன்று காணப்படவேண்டும் என்ற மனுவொன்றைப் பெற்று புதிய அரசாங்கம் ஆட்சிபீடமேறியுள்ளது.

திருமதி சந்திரிகா குமாரதுங்கா ஆட்சிக்கு வந்த பின்னர் எமது மக்கள் மத்தியில் தமக்குள்ள கஷ்டங்கள் நீங்கிவிடும் என்றும் —

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் ஆயுதப் போராட்டம் தீர்க்கப்பட்டுவிடும் என்றும் —

நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டுள்ளார்கள்.

### வரவேற்றோம்

உங்களது ஜனாதிபதி, பிரதம மந்திரி ஆகியவுடன் பொருளாதாரத் தடையைத் தளர்த்தி நல்லெண்ண சமிக்ஞையை காட்டியதை நாம் பெரிதும் வரவேற்றோம். ஆனால் இன்னும் எமது மக்கள் முகம் கொடுக்கும் பெருமளவிலான பிரச்சினைகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியவையாக இருக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் சமாதானச் சூழ்நிலைதோற்றுவிக்கப்பட வேண்டுமென விடுதலைப் புலிகள் ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வந்துள்ளனர். இது தொடர்பாக போர் நிறுத்தம் செய்வதற்கும் விடுதலைப் புலிகள் தயாராக இருந்தனர்.

உங்களது அரசாங்கம் முதற்கட்டமாக இரண்டு வாரங்களுக்கு போர் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைப்பதற்கு இணங்கியுள்ளது. போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும் நடைமுறைகள் பற்றி இன்று நாங்கள் பேசுவதற்கு இருக்கின்றோம். இந்த பிரதான விடயத்தில் நாங்கள் ஓர் இணக்கத்தை அடையலாம் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம்.

அடுத்ததாக பொருளாதாரத்தடை முற்றுமுழுதாக நீக்கப்பட்டு சிங்கள மக்களிற்கு அத்தியாவசியப் பொருள்கள் எவ்வளவு சுதந்திரமாக கிடைக்கின்றதோ அதேபோல் எமது மக்களுக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கவேண்டும். இது ஒரு நியாயமான— நேர்மையான —கோரிக்கை.

### எங்கள் எதிர்பார்ப்பு

அரசாங்கம் முற்றுமுழுதாக பொருளாதாரத் தடையை நீக்கி எமது மக்களின் அவல நிலையைப் போக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

மூன்றாவதாக எமது மக்கள் சுதந்திரமாக போக்குவரத்துச் செய்வதற்கு குடா நாட்டிற்கும் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கும் இடையில் போக்குவரத்துப் பாதை ஒன்று திறக்கப்படவேண்டும். எமது மக்கள் கிளாலி நீரேரியைக் கடப்பதற்கு எவ்வளவு பாரிய அபாயங்களையும் கஷ்டங்களையும் எதிர்நோக்குகின்றார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத்தெரியும்.

இந்த விடயம் முதற் கட்டப் பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டது.

பல காரணங்களுக்காக நாங்கள் சங்குப்பிட்டி — பூநகரி பாதை திறக்கப்படவேண்டும் என்றும்—

அதற்காக பூநகரியிலுள்ள இராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டுமென்றும் வலியுறுத்திவருகிறோம். இந்த விடயம் எமது மக்களின் இயல்பான வாழ்க்கையை பாரதூரமாகப் பாதிக்கின்றது. ஆகவே நாங்கள் இவ்விடயத்தில் அரசாங்கம் சாதகமான முடிவை எடுக்குமென்று எதிர்பார்க்கின்றோம்.

### மீன்பிடித் தடை

நான்காவதாக—

கடலில் எமது மக்கள் மீன்பிடிப்பதற்கான தடை நீக்கப்படவேண்டும்.

கடலில் மீன் பிடிக்கும் தடை தமிழ் மீனவச் சமூகத்தில் சொல்ல முடியாதளவிற்கு கஷ்டங்களை கொடுத்து வருகின்றது. இத்தடையை அரசாங்கம் நீக்கி எம்மக்களின் நீண்ட காலக் கஷ்டங்களை இல்லாது ஒழிக்குமென்று நாம் மனதார எதிர்பார்க்கின்றோம்.

ஐந்தாவதாக—

யாழ்குடா நாட்டிலுள்ள தமிழ் மக்கள் மீள்குடியேற்றும் பிரச்சினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். அகதியாக இடம் பெயர்ந்து வாழும் இம்மக்கள் தமது கிராமங்களுக்கு மீண்டும் சென்று குடியேறி வாழ்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

அடுத்ததாக—

நீங்கள் வாக்குறுதியளித்தது போல புனர்நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு உடனடியான நடவடிக்கைகளை எடுப்பீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இவையே எமது மக்களின் அன்றாடப்பிரச்சினைகளாகும்.

இந்த இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் எமது மக்கள் எதிர்கொள்ளும் இந்த அத்தியாவசியப் பிரச்சினை தீர்ப்பதற்கு ஆக்க பூர்வமான முடிவுகள் எடுக்கப்படுமென நாம் நம்புகிறோம். — என்று தெரிவித்தார். (உ)

# வடக்கு-கிழக்குஇனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையே சிறந்த தீர்வாகும்!

## ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறுகின்றார்

கொழும்பு, ஜன 4

வடக்கு – கிழக்குப் பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பை வழங்குவதே சிறந்த தீர்வாகும்.

— இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா கூறினார்.

''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:-

கேள்வி:– 1983இற்குப் பின்னர் வன்முறையை வன்முறையால் எதிர்கொள்ள அரசு முடிவு செய்ததாக நீங்கள் கூறினீர்கள். அது தவறாகவும் மேலதிகமாகவும் பயன்படுத்தப்படவில்லையா?

ஜே.ஆர்.:- ஆயுதப் படையினர் பொது மக்களைக் கொன்றார்கள் — சில சமயங்களில் தவறான முறையில் அவர்களுக்கு அத்தகைய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது நாட்டைக் காப்பாற்றுவதற்கு அத்தகையசெயல்கள்தேவைப்பட்டன.

ஒரு விஷப்பாம்பு வந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ அதனை எடுக்க வேண்டும். ஒன்றில் நீங்கள் வீட்டை விட்டு ஓட வேண்டும். அல்லது விஷப் பாம்பைக் கொல்ல வேண்டும்.

ஒருபயங்கரவாதி துப்பாக்கியுடன் வரும் போது நாம் வெறும் கையுடன் அவனை கையாள முடியாது.

கேள்வி:– அரசியல் லாபத்துக்காக விடுதலைப் புலிகள் பிரச்சினையைத் தீர்க்க நீங்கள் விரும்பவில்லை என ஒரு குற்றச்சாட்டு கூறப்படுகின்றதே?

ஜே ஆர்.:- இல்லை நாங்கள் சர்வகட்சி மாநாடுகளை நடத்தினோம். ஆனால் அவை வெற்றியளிக்கவில்லை.

அவர்கள் சமஷ்டி முறையிலான அரசைக் கோரினார்கள். அவர்கள் கேட்டதைக் கொடுக்க [illegible] விரும்பவில்லை. அவர்கள் கொடுக்க [illegible] மக்கள் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை.

ஏதாவது செய்ய வேண்டுமானால் பலாத்காரம் மூலமே செய்ய வேண்டியிருந்தது. பலாத்காரம் மூலம் அது செய்யப்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்?

கேள்வி:- இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கு — கிழக்குப் பிரச்சினைக்கு எது சிறந்த தீர்வாக இருக்கும் என நீங்கள் கருதுகின்றீர்கள்?

ஜே. ஆர்:- சமஷ்டி முறை.

கேள்வி:– நீங்கள் ஜனாதிபதியாக இருக்கும் போது ஏன் அதனைச் செய்யவில்லை?



ஜே ஆர்:- அந்த நேரத்தில் சமஷ்டி முறையை வழங்க எமது மக்கள் தயாராக இருக்கவில்லை.

கேள்வி:- அதிகாரத் துஷ்பிரயோகத்துக்காக தங்களின் குடியுரிமையைப் பறிப்பதற்கு முயற்சி நடப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது குறித்து நீங்கள் கூறுவது என்ன?

ஜே ஆர்;- இந்த விவகாரத்தை விசாரிக்க ஓர்ஆணைக்குழு அமைக்கப்பட்டால் — எனது குடியுரிமையைப் பறிக்க வேண்டும் என அந்த ஆணைக்குழு சிபாரிசு செய்யுமானால் — பரவாயில்லை

முன்னாள் ஜனாதிபதிக் [illegible] குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுமானால் அது பொறாமையால் எழுந்த நடவடிக்கையாகவே இருக்கும். இத்தகைய விடயம் பற்றி சிறிமாவோ பண்டாரநாயக்காவே பிரஸ்தாபித்து வருகிறார். அவரின் குடியுரிமையை நான் பறிக்கவில்லை. ஒரு சட்ட ரீதியான ஆணைக்குழுவே அதனை சிபாரிசு செய்தது.

கேள்வி:- ஐக்கிய தேசிய கட்சியில் மீண்டும் பொறுப்புக்களை நீங்கள் வகிக்கின்றீர்களா?

ஜே. ஆர்:- ஐ. தே. கவை மீளக் கட்டியெழுப்ப நான் யாருக்கும் எந்த ஆலோசனையையும் இப்போது வழங்கவில்லை.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க சிறப்பாகச் செயலாற்றுவார் என்பது எனது நம்பிக்கை. அவர் எனது ஆலோசனையைக் கோரினால் நான் அவருக்கு அதனை வழங்குவேன். சந்திரிகா குமாரதுங்க எனது ஆலோசனையைக் கோரினால் கூட நான் அவருக்கு அதனை வழங்குவேன்.

கேள்வி:- ஜனாதிபதி என்ற முறையில் சந்திரிகா குமாரதுங்கவின் செயற்பாடு எவ்வாறு உள்ளது?

ஜே. ஆர்:- அவர் நன்றாக நாட்டை ஆள்வதை நான் காண்கிறேன். ஜனநாயகம் அங்கு உள்ளது. அது அங்கு இருக்கும்வரை நான் எதிர்க்க மாட்டேன்.

நான் எந்தக் குழுவுக்கும் எதிரானவன் அல்லன் ஆனால் பயங்கரவாதத்துக்கு எதிரானவன்.

இன்றைய அரசியல் வாதிகளுக்கு நான் வழங்க வேண்டிய செய்தி ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதே. வார்த்தைகளில் அல்ல செயலில்; எமது சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்; தேர்தல்கள் ஒழுங்கு முறைப்படி நடத்தப்பட வேண்டும்; எதிரணியின் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான அதிகாரம் பேணப்பட வேண்டும்; ஜனநாயகத்துக்கு இசைவாக எதிரணி செயலாற்ற வேண்டும்; அரசாங்கத்துக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கக் கூடிய சுதந்திரம் நீதித் துறைக்கு இருக்க வேண்டும்; அத்தகைய சமுதாயத்தை உருவாக்க அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும். (உ)

---

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இளையதம்பி

(அதிபர் கைதடி நுணாவில் தமிழ்க்கலவன்பாடசாலை)

கைதடி நுணாவில் கந்தையா இளையதம்பி அவர்களின் ஈமக்கிரியைகள் இன்று (4 - 1 - 1995) காலை 10 மணிக்கு குச்சப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சரவணமுத்து
(சகோதரன்)

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி. (34504)

## அல்பிறட் சிங்கராயர் மாட்டீன்

இளைப்பாறிய கடற்படை உத்தியோகஸ்தரும், யாழ். மக்கள் வங்கி பாதுகாப்பு உத்தியோகஸ்தரும், சமூக சேவையாளருமான அல்பிறட் சிங்கராயர் மாட்டீன் அவர்கள் 1.1.95 அன்று அமரத்துவம் அடைந்து விட்டார்.

இவர் சில்லாலையூரைச் சேர்ந்த காலஞ்சென்ற மாட்டீன் சிசிலியா தம்பதியினரின் அன்புப் புதல்வனும், மேரி மாகிறேற் அவர்களின் அன்புக் கணவரும், மரீனா (பத்திரிசியன் தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியை), மேசி, றொஷான், லக்ஷி, மெல்றோய் (பத்திரிசியார் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன், நவரட்ணம், திருமதி பற்றிமா வேதநாயகம், றெட்ணராஜன், காலஞ்சென்ற செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மேரி, திரேசா, வேதநாயகம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 4.1.95 பி.ப. 3.00 மணியளவில் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மரீனா மாட்டீன்
[மகள்]

இல 23, கதீற்றல் வீதி,
யாழ்ப்பாணம். (8181)

## கந்தையா சபாரத்தினம்

(இரத்தின வாசம், இராச வீதி, நீர்வேலி)

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கந்தையா சபாரத்தினம் [இளைப்பாறிய நிலைய முகாமி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாசபை முன்னாள் உறுப்பினர்) அவர்கள் 03- 01- 1995 ஆம் திகதி மு. ப. 10. 30 மணியளவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், அருந்தவரத்தினம் (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்-விஞ்ஞானம், கோப்பாய்), சபேஸ்வரன் (நோர்வே), வசந்தி [ஆசிரியை வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி சிறுப்பிட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியஞானதேவி, அனுசியா [நோர்வே], கணேசலிங்கம் [விரிவுரையாளர் இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்] ஆகியோரின் அன்பு மாமனாரும், உஷானந்தன், சுஜீவா, கயூரன் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி கனகமணி நடராசா [கோலாலம்பூர்] அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை (04- 01- 95) பி. ப. 2. 00 மணியளவில் இராசவீதி. நீர்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் நீர்வேலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
ச. அருந்தவரத்தினம்
(மகன்)

நீர்வேலி வடக்கு (8182)

## திருமதி அன்னப்பிள்ளை வயிரமுத்து

சங்கானை தொட்டிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற வயிரமுத்து (பொலீஸ் உத்தியோகத்தர்) அவர்களின் மனைவி அன்னப்பிள்ளை நேற்றுச் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சிவபாலன் (மாவட்ட நீதிமன்றம் — யாழ்ப்பாணம்), கிருஷ்ணபாலன் (நீதிவான் நீதிமன்றம் — யாழ்ப்பாணம்), செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கராசா (சவுதி), இராஜேஸ்வரி, கலைவாணி ஆகியோரின் அன்பு மாமியாரும், மதிவதனி, ரவிசங்கர், கலைமதி, கலைச்செல்வி, கேசவன், நமணன், ராகுலன், கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (4 - 1—95) புதன்கிழமை பிற்பகல 1.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தொட்டிலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுககொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்

தொட்டிலடி,
சங்கானை, (34519)

## திருமதி நவமணி கனகசபை

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், உடுவில் காளிகோவிலடியை வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி நவமணி கனகசபை நேற்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை அவர்களின் அன்பு மனைவியும், கெங்காதரன், பத்மசோதி, காலஞ்சென்ற செம்பொற்சோதி மற்றும் கருணாகரன், ஜெகசோதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னராசா, கமலாதேவி, பவானந்தன், சுசிலாதேவி ஆகியோரின் மாமியாரும், கனகசபேசன், நடனசபேசன், காயத்திரி, சாவித்திரி, தர்சினி, ரேணுகா, சுஜீபன், பார்த்திபன், காண்டீபன், சிந்துஜன், தர்மிலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04 – 01 – 1995) பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கெங்காதரன்
க. கருணாகரன்
(மகன்மார்)

காளிகோவிலடி,
உடுவில்,
சுன்னாகம். (34517)

---


வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்

1995 ஆம் ஆண்டிற்கான
கேள்வி அறிவித்தல்
இணுவில்
ஆட்டிறைச்சிக்கடை

மேற்படி கேள்வியின் பொருட்டு உதயன் பத்திரிகையில் 31—10—1994 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக, இணுவில் ஆட்டிறைச்சிக் கடைக்கான கேள்விகள் மீண்டும் கோரப்படுகின்றன. இதற்கான கேள்விப் பத்திரங்கள் 11—01—1995 பகல் 12 மணிவரை வழங்கப்படும். 12—01—1995 பகல் 12 மணிவரை கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் பி. ப. 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் சகல கேள்விக்காரரையும் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்
03—01—1995. (சி/5759)


## இதய அஞ்சலி

எமது பௌதிகவியல் ஆசான்
இரவீந்திரநாதன்
அவர்களின் தந்தையார்
சி. இரத்தினம்

அவர்களின் மறைவுக்கு எமது இதய அஞ்சலிகளைச் செலுத்துகிறோம்.

13 'D' உயிரியல் பிரிவு
(95 A/L)
யாழ். இந்துக் கல்லூரி. (34516)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



ஹெலியில் வந்திறங்கும் அரசுத் தரப்புத் தூதுக் குழுவை வரவேற்க சென் ஜோன்ஸ் அதிபர் இல்லத்துக்கு முன்பாக காத்து நின்ற வாகனங்கள்.



சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இறங்கி நிற்கும் ஹெலி.

# போர் நிறுத்தம், சமாதானம் அதுவே படையினர் ஆவல்

## பேச்சு நடத்த வந்த லெப். ஜெனரல் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 4

''போர் நிறுத்தம் ஒன்று அமுலுக்குவந்து அதன் மூலம் சமாதானம் உருவாக வேண்டும் என்றே படையினர் முற்றுமுழுதாக விரும்புகிறார்கள்''.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த நேற்று யாழ்ப்பாணம் வந்த இராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் சிறி பீரிஸ் பேச்சு ஆரம்பமாவதற்கு முன்னர் உதயனுக்கு மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அர்த்தமற்ற போர் தொடர்வதை படையினரும், சிங்கள மக்களும் விரும்பவில்லை. விரைவில் சமாதானம் ஏற்படவேண்டும் என்பதுதான் சகல தரப்பினரின் அவாவாகும்.

மோதல் தவிர்ப்போ அல்லது யுத்த நிறுத்தமோ அர்த்தமுள்ளதாக — நிரந்தரமாக சமாதானத்தை நோக்கிச் செல்வதாக -- இருக்க வேண்டும் என்பதுதான் சகலரதும் எதிர்பார்ப்பாகும். தற்காலிகமானதாக இது இருக்கக் கூடாது.

மோதல் தவிர்ப்போ, போர் நிறுத்தம் ஒன்றோ ஏற்படும் பட்சத்தில் படையினர் அதை முழுமையாக ஏற்று நடப்பர். அதில் எந்த வித சந்தேகத்துக்கும் இடமில்லை.

அரசு மேற்கொண்டுள்ள சமாதானத்தை நோக்கிய முயற்சிகளுக்கு படையினர் எதுவிதத்திலும் இடையூறாக இருக்கமாட்டார்கள். அவர்கள் தமது முழு ஆதரவையும் வழங்குவர் — என்றார். [உ-3]

### பௌத்த அமைப்புக்கள் பல

# பாப்பரசர் விஜய வேளை கறுப்பு கொடிகாட்ட முடிவு

கொழும்பு ஜன. 4

பாப்பரசரின் இலங்கை விஜயத்தின் போது கறுப்புக் கொடிகாட்டுவதற்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும்பல பௌத்த அமைபுக்கள் முடிவு செய்திருப்பதாக கூறப்படுகின்றது.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை பௌத்த நிறுவனங்களின் சம்மேளனம் நடத்திய கூட்டத்தில் இது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

பௌத்த மதத்துக்கு எதிராக கருத்து வெளியிட்டு புத்தகம் எழுதியவர் பாப்பரசரே. ஸ்ரீலங்கா ஆயர் அல்ல. எனவே அதற்கு மன்னிப்புக் கோர வேண்டியவர் பாப்பரசரேயன்றி ஆயர் அல்ல.

பௌத்தத்துக்கு எதிராகக் கருத்து கூறிவிட்டு — அதற்காக மன்னிப்புக் கோராமல் — பௌத்த தேசத்துக்கு ஆயர் வருவது மரபற்றதாகும் — இவ்வாறு பௌத்த நிறுவனங்களின் சம்மேளனப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். (உ)

### ஆலயங்களில்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வருடாந்த மார்கழி மாத திருவிழா இன்று காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஓ-15-18)

★ ★ ★

அராலி அகாயக்குளம் விநாயகர் ஆலயத்தில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருவாசக முற்றோதல் நிகழ்வும் திருவாசகச் சொற்பொழிவும் நடைபெறும். (க)

### நுண்ணிய முறையில் தயாரான

# புதிய அடையாள அட்டை இவ்வருடம் அறிமுகமாகும்

கொழும்பு, ஜன. 4

ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம் மிக நுண்ணிய முறையில் தயாரிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளை இந்த வருடம் அறிமுகம் செய்யவிருக்கிறது.

மோசடி செய்ய முடியாத வகையில் பாதுகாப்பாக தயாரிக்கப்படும் இந்த அடையாள அட்டைகள் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவையாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

பொலீஸார், சுங்க அதிகாரிகள், விமான நிலைய அதிகாரிகள், அரசாங்க தனியார் துறை உத்தியோகத்தர்கள் ஆகியோர் பல தடவைகள் தேசிய அடையாள அட்டைகள் மோசடி செய்யப்பட்டு உத்தியோக பூர்வ நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டதை கண்டுபிடித்துள்ளார்கள் என்று ஆட்களை பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளர் கே. ஜே. டப்ளியூ. ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொம்பியூட்டர் திட்டத்தின்கீழ் பாதுகாப்பான அடையாள அட்டைகளை தயாரிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

கடந்த வருடம் திணைக்களம் 3 லட்சத்து 76 ஆயிரம் அடையாள அட்டைகளை விநியோகித்திருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

### வெளிநாடு ஒன்றில்

# புலிகள் ஆயுதங்களை பதுக்கி வைத்துள்ளனராம்

## சுப்பிரமணிய சுவாமி சொல்கிறார்!

சென்னை, ஜன. 4

விடுதலைப் புலிகள் இயக்கம் புதிதாகக் கொள்வனவு செய்திருக்கும் ஆயுதங்களை பிறநாடு ஒன்றில் பதுக்கி வைத்துள்ளதாக டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

இந்த ஆயுதங்களை எச்சந்தர்ப்பத்திலாவது யாழ்குடா நாட்டுக்குக் கொண்டு செல்லப் புலிகள் இயக்கத்தினர் திட்டமிட்டுள்ளனர்.

தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் புலிகள் இயக்கம் அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை என்றும் —

சமாதானம் என்ற போர்வையில் ஆயுதங்கள் அடங்கிய கப்பலை இலங்கைக்குக் கொண்டுவருவதே அவர்களின் நோக்கம் என்றும் அவர் சொன்னார்.

தஞ்சாவூரில் நடைபெறுகின்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடு புலிகளைத் தமிழ் நாட்டில் பிரபல்யம் அடையச் செய்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அரசும் புலிகள் இயக்கமும் நடத்திய பேச்சுவார்த்தையின் விவரங்கள் அடங்கிய அறிக்கையின் பிரதி ஒன்று வெளிவிவகார அமைச்சரிடம் உள்ளதாகக் கூறிய சுப்பிரமணியம் சுவாமி, தமிழ் நாட்டில் செல்வி ஜெயலலிதாவின் அரசு புலிகள் இயக்கத்தை பிரபல்யமாக்கி உள்ளதாகவும் கூறியுள்ளார்.



அரசுத் தூதுக்குழுத் தலைவர் குசும்சிறி பாலபட்டபெண்டி ஹெலிக்கொப்டரை விட்டு இறங்குகின்றார்.

# நிரந்தர போர் நிறுத்தத்தின் பின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்போம்

## அரசதரப்பிடம் கூறியதாக தமிழ்ச்செல்வன்

யாழ்ப்பாணம், ஜன. 4

நிரந்தர போர் நிறுத்தத்தைக் கொண்டு வந்துவிட்டு வடக்கில் அபிவிருத்து வேலைகளை மேற்கொள்ள நாம் முழு ஒத்துழைப்பும் தருவோம் என்று அரசாங்கத் தரப்பினரிடம் தெரிவித்தோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை வகித்த திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் பேச்சுவார்த்தைகள் முடிவுற்ற பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

திரு. தமிழ்ச்செல்வன் நேற்று மேலும் கூறியதாவது:-

இன்றைய பேச்சுவார்த்தைகளில், போர் நடவடிக்கைகளை இடைநிறுத்தம் செய்வது, அதனைக் கடைப்பிடிக்கும் வழிமுறை, அது சம்பந்தமான ஒழுங்கு விதிகளை இருதரப்பும் மேற்கொள்வது போர் நிறுத்தத்தை கண்காணிக்கும் சமாதானக் குழுக்களை அமைத்தல் போன்ற பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டு இணக்க நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் மோதல் தவிர்ப்பை எப்போது நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பது குறித்து இன்னும் அறிவிக்கப்படவில்லை. ஒரு சில தினங்களில் அது அறிவிக்கப்படும். முதலில் அரசாங்கம் அறிவிக்கும் பின்னர் நாம் அறிவிப்போம்.

போர் இடைநிறுத்த நடவடிக்கை இறுதியில் ஒருபூரண போர் நிறுத்தமாக (Cease Fire) பரிமாணம் பெறும்.

இது சம்பந்தமாகவும் இருதரப்பினரும் பேச்சுக்களை நடத்துவர்.

மோதல் தவிர்ப்பு தொடர்பான நடைமுறை விவரங்களை இன்று அல்லது நாளை நாம் வெளியிடுவோம்.

மோதல்களை முதலில் இரண்டு வாரங்களுக்கு நிறுத்திவிட்டு, அதை படிப்படியாக நீடிப்போம். ஆனால் அதை ஒரு பூரண யுத்தநிறுத்தமாக — தொடர்ச்சியான நிலையான யுத்த நிறுத்தமாக — மாற்றுவது பற்றியும் தொடர்ந்து பேசி, அதுபற்றி முடிவு செய்வோம்.

### அன்றாடப் பிரச்சினைகள்

முதலாம் கட்டப் பேச்சுக்களில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் எதுவும் இதுவரை தீர்க்கப்படவில்லை. என்று நாம் அரசாங்க பிரதிநிதிகளிடம் வலியுறுத்திக் கூறினோம்.

அத்தோடு முதல் கட்டப் பேச்சில் பேசிய விடயங்கள் எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள்.

அடுத்த கட்டப் பேச்சுக்களில் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறியுள்ளோம்.

அன்றாடப் பிரச்சினைகள் குறித்து அரசு வாக்குறுதி அளித்த எதுவும் நடைமுறைக்கு வரவில்லை. உடனடியாக அரசு நடவடிக்கையை எடுத்து தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்று நாம் வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் [illegible]

முதலாவது இயல்பு நிலையை தோற்றுவிப்பதற்கான உருப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் இது குறித்து சில விடயங்களில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

### பொருளாதாரத் தடையை நீக்கல்

இரண்டாவது பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குதல். இது தொடர்பாக அரசுடன் கலந்து பேசி அடுத்த பேச்சுக்கு வரும்போது முடிவுடன் வருவதாக அரச பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

தடை நீக்கப்பட்ட பொருள்களை இங்கு கொண்டு வருவதில் வவுனியாவில் ஏற்படும் தடங்கல்கள் குறித்து நாம் விளக்கினோம். சிங்கள மக்களுக்கு எப்படி பொருள்கள் தாராளமாகக் கிடைக்கின்றனவோ அப்படி தமிழ் மக்களுக்கும் இங்கு கிடைக்க வேண்டும். அதுதான் உண்மையான பொருளாதாரத் தடை நீக்கமாக இருக்கும் என்று எடுத்துரைத்தோம். இதை தாம் நிவர்த்தி செய்ய முயற்சி எடுப்பதாக அரச பிரதிநிதிகள் வாக்குறுதி அளித்தனர்.

### பாதை திறப்பு

மூன்றாவது விடயம் பாதை திறத்தல்: பாதை திறக்கும் விடயத்தில் நாம் பூநகரிப் பாதையைத்தான் திறக்க வேண்டும் என்று கூறினோம். அது திறக்கப்பட வேண்டுமானால் அங்குள்ள ராணுவ முகாமை அகற்ற வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினோம்.

பூநகரிப் பாதையை ஏன் திறக்க வேண்டும் என்பதற்கான விளக்கம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

அவர்கள் ஆனையிறவுப் பாதையைத் திறக்கலாம என்று கூறினார்கள்.

பூநகரிப் பாதையைத் திறந்து மக்கள் சுதந்திரமாக நடமாட விட்டு, அங்கு உள்ள ராணுவத்தை அகற்றிய பின்னர், வேண்டுமானால் ஆனையிறவுப் பாதையைத் திறக்க நாம் அனுமதிப்போம என்று தெரிவித்தோம்.

இந்த விடயம் தொடர்பாக கொழும்பில் பேச்சு நடத்தி முடிவு எடுத்து, அடுத்த பேச்சுவார்த்தையின் போது தெரிவிப்பதாகக் கூறினார்கள்,

மக்களின் இன்றைய அன்றாடப் பிரச்சினைகளை முதலில் தீர்த்து வைத்த பின்னர் அவற்றுக்கான செயற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டு வந்த பின்னர் — இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேசலாம் என்பதனை இன்றைய பேச்சின் போது நாம் தீர்க்கமாக வலியுறுத்தினோம்.

### கடல்வலயத் தடை

கடல்வலயத் தடையையும் நீக்குமாறு நாம் வலியுறுத்தினோம். அது மோதல் தவிர்ப்புடன் சம்பந்தப்பட்டது. ஆகவே தாக்குதல் நிறுத்த அறிவிப்போடு மீனவர்களும் சுதந்திரமாக மீன் பிடிக்கும் சூழ்நிலை— வாய்ப்பு—வரும்.

மோதல் தவிர்ப்புக் குறித்து அரசு அறிவிப்பு வந்தவுடன் — மீனவர்களும் சுதந்திரமாக — இராணுவ முகாம் பகுதிகளை தவிர்ந்த ஏனைய இடங்களில் மீன் பிடிக்க வாய்ப்புவரும்.

### இடம்பெயர்ந்தோர் விவகாரம்

மீளக் குடியமர்த்தல் தொடர்பாகவும் நாம் கூறினோம்.

அது தொடர்பாகப் பல திட்டங்களை தாம் வைத்திருப்பதாகவும், இடம்பெயர்ந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதாவும், அவர்களை பழைய இடங்களில் மீளக் குடியேற்றுவதற்கான திட்டங்கள் தம்மிடம் உள்ளதாகவும் அவர்கள் கூறினார்கள்.

இடம்பெயர்ந்தோர் மீளக் குடியேறும் இடங்களில் இருந்து இராணுவம் வாபஸ் பெற வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளோம். இவை குறித்து அரசுடன் ஆராய்ந்து அடுத்தகட்டப் பேச்சுக்களின் போது தெரிவிப்பதாக அவர்கள் கூறினார்கள்.

ஒட்டுமொத்தமாக — மக்களின் அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு இயல்பு நிலையை தோற்றுவித்து, உறுதியான போர் நிறுத்தத்தை உருவாக்கி, மக்களின் சமூக பொருளாதாரவாழ்வை மேம்படுத்தியதன் பின்னர் — அப்படியான உருப்படியான நடவடிக்கைகளை எடுத்த பின்னர் — இனப்பிரச்சினை பற்றி பேசலாம் என்று நாம் கூறினோம்.

நிரந்தரமான யுத்த நிறுத்தத்தை கொண்டுவந்துவிட்டு, வடக்கில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள நாம் முழு ஒத்துழைப்பையும் தருவோம் என்றும் அரச தரப்பினரிடம் தெரிவித்தோம். —

— இவ்வாறு திரு. தமிழ்ச்செல்வன் கூறிமுடித்தார்.

### பூநகரி விவகாரம்

அரச குழுவில் இராணுவ அதிகாரி ஒருவர் வந்தாரே, பூநகரி இராணுவ முகாம் வாபஸ் குறித்து அவருடன் நீங்கள் பேசவில்லையா என்று திரு. தமிழ்ச்செல்வனிடம் கேட்கப்பட்டபோது, அவர் கூறியதாவது:-

பூநகரிப் பாதைக்காகத்தான் இராணுவ அதிகாரி வந்தார்.

இராணுவமுகாம் அப்படியே இருக்கக்கூடியதாக பொதுமக்கள் பூநகரிப் பாதையால் போனால் என்ன? — என்று அவர் கேட்டவண்ணம் இருந்தார்.

இராணுவம் அங்கு நிற்கும் போது மக்கள் போகமுடியாது என்று எமது தரப்பில் கூறினோம்.

இராணுவம் நின்று சோதனை செய்கிறதோ, செய்யவில்லையோ, இராணுவம் அங்கு நிற்பது எங்களுக்கு இடையூறு ஆகவே இராணுவத்தை முற்றாக விலக்கினால் போக்குவரத்துப் பாதையைத் திறக்கலாம் எனத் தெரிவித்தோம் — என்றார். [அ-3-9]

# தென்பகுதியில் 954 கொலைகள்

கொழும்பு, ஜன. 4

ஸ்ரீலங்காவில வடக்கு-கிழக்கு தவிர்ந்த பகுதிகளில் கடந்த செப்ரெம்பர் வரையான காலத்தில் 954 கொலைகள் இடம்பெற்றுள்ளன.

ஸ்ரீலங்கா பொலிஸ் தலைமையாகப் புள்ளிவிவர அறிக்கை மூலம் இது தெரியவந்துள்ளது.

(க-4)

### பதவியேற்பு

நான்கு மாகாணங்களுக்குப் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் சபாநாயகருமான ஸ்ரான்லி திலகரத்ன மத்திய மாகாண ஆளுநராகவும்—

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசரான கே. விக்னராஜா மேல்மாகாண ஆளுநராகவும்—

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்ததசநாயக்க ஊவாமாகாண ஆளுநராகவும்—

ஐ. தே. க. அரசின் முன்னாள் உப சபாநாயகரான காமினி பொன்சேகா வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராகவும்—

முன்னாள் தூதுவரான டாக்டர் நெவில் கனகரத்ன தென் மாகாண ஆளுநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்

இவர்கள் நேற்றுக் காலை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

### சென்னை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் ஷோக், அதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் வேலுப்பிள்ளை ஆகியோரும் கைது செய்யப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

இவர்களைக் கைது செய்த தமிழக அரசின் நடவடிக்கையை தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக செயலாளர் ஆர். நல்லகண்ணு, எம். ஜி. ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் கண்டித்துள்ளனர்.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

### பேச்சு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸம் கடற்படை அதிகாரி பிரசன்னா ராஜரட்னவும் அதையடுத்து நவீன்குணரத்தினா, ராஜன் ஆசிர்வாதம் ஆகியோரும் அமர்ந்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் குழுவின் தலைவர் சு. ப. தமிழ்ச்செல்வன் முதலிலும், அவரையடுத்து திரு. கரிகாலன், திரு. இளம்பரிதி, திரு. டொமினிக், திரு. ரவி ஆகியோரும் அமர்ந்திருந்தனர்.

பேச்சுக்களின் ஆரம்பத்தில் முதலில், பேசப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் அவற்றுக்கு ஒதுக்கப்பட வேண்டிய நேரங்கள் பற்றியும் இருதரப்பினரும் கலந்து பேசித் தீர்மானித்தனர்.

முதல் விடயமாக மோதல் தவிர்ப்புக் குறித்து ஆராய முடிவு செய்யப்பட்டது.

மாலைவரை நடந்த பேச்சுக்களை அடுத்து உள்ளூர் செய்தியாளர்களைச் சந்தித்த அரச பிரதிநிதிகள் மாலை 5 மணியளவில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் வந்திறங்கிய ஹெலியில் பலாலிக்குத் திரும்பிச் சென்றனர்.

அங்கிருந்து விசேட விமானத்தில் குழுவினர் உடனடியாகக் கொழும்பு திரும்பினர்.

அரச குழுவினருக்கும் புலிகளின் கொமாண்டோ படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

தமிழீழ காவல்துறையினர் வீதிப்போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். [உ 3]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கல்லூரி மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஐந்து லீற்றர் மண்எண்ணெய் 5-1-95 காலை 9-00 பிற்பகல் 1-00 வழங்கப்படும். வெற்றுப் பால்கலும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மாணவர் அவை, தொழில் நுட்பக் கல்லூரி, கொக்குவில். [34485]

4 மாத பொமனேரியன் ஆண் நாய்க்குட்டியும், சில்க்கி, பாபடிக்கல்ஸ் 3 மாத கோழிக்குஞ்சுகளும், அடைவைக்க உகந்த சகல அலங்கார கோழி முட்டைகளும் விற்பனைக்குண்டு. இல. 1, தவக்குமார் வீதி, மடத்தடி (தூபி அருகில்), சங்கத்தானை, சாவகச்சேரி. (8174)

## அப்பியாசக்கொப்பி

பாடசாலை மாணவர்களுக்காக அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி [வெலிங்டன் சந்திக்கு அருகில்], யாழ்ப்பாணம். [சி-255]

## விலை குறைத்துள்ளோம்

மெய்கண்டான், ஒப்சேர்வர் டயறி, றிச்சாட் அன் கொம்பனி டயறிகள் விலை குறைத்துள்ளோம். உடன் பெற்றுக் கொள்ளவும். பொருளியல் நோக்கு ஏக விநியோகஸ்தர்கள்: மக்மிலன் புத்தகசாலை, ஸ்ரீகாந்தா புத்தகசாலை யாழ்ப்பாணம். [சி-97]

## ஓடர்கள் கவனிக்கப்படும்

சிறுவர் பெரியோர்களுக்கான றெடிமேட் ஆடைகள் மற்றும் சாறி பிளவுஸ், ஆண்களுக்கான ரவுஸர் ஷேர்ட் பெண்களுக்கான பாட்டி பீறக் ஆகியவற்றை குறித்த தவணையில் தைத்து பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு சலுகை விலைகள் தொடர்பு: சிற்றி காமன்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி. கிளை: சிவபதி, இணுவில். [சி-74]

## கண்டெடுக்கப்பட்டது

1-1-95 காலை நவாலி வீதியில் விலை உயர்ந்த பொருள் ஒன்று விங் பார்மஸி உரிமையாளரால் கண்டெடுக்கப்பட்டது. தவறவிட்டவர் தகுந்த ஆதாரம் காட்டி கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளவும். விங் பார்மஸி, காங்கேசன்துறை வீதி, தட்டா தெரு, யாழ்ப்பாணம். [34477]

## தவறிவிட்டது

ஒரு தொகைப் பணத்துடன் அடையாள அட்டை 333000210V, முக்கிய குறிப்புக்களும் அடங்கிய பேர்ஸ் 01-01-95 காலை சின்னக் கடை இறைச்சிக்கடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து 39, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தகவல்: மோ. தார்சிசியஸ். [34500]

## ரீ. வி., டெக் திருத்துநர்

சகல றேடியோக்கள் ரி. வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [சி-254]

## மணமகன் தேவை

17-2-52 சுவாதி, 2ஆம் பாதம் செவ்வாய் தோஷமற்ற B.A. ஆசிரியைக்கு இந்து, அரச உத்தியோக மணமகன் தேவை. சமீபத்தில் எடுத்த புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்: அபிராமி திருமண சேவை, சாவகச்சேரி. [33486]

5-12-54 உத்தரட்டாதி 4ஆம் பாதம், செவ்வாய் தோசமற்ற B.Com. ஆசிரியைக்கு அரச உத்தியோகமுள்ள மணமகன் தேவை. தொடர்பு கொள்க: அபிராமி திருமண சேவை, சாவகச்சேரி. [34487]

## பட்டயக் கணக்காளர்

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்திகள் பெற்றோர், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவன மாணவர்களாகத் தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு: இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி. [34509]

## SPOKEN ENGLISH

விரிவான விளக்கத்துடன் ஆரம்பத்திலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. பாடசாலைகளில் படிப்பை முடித்தவர்கள் சேர்ந்துகொள்ளலாம். V.N Kandasamy இல. 87, திருநெல்வேலி றோட் (ரயில் கடவைக்குச் சமீபமாக), கொக்குவில். [8175]

## வெளிவந்துவிட்டது!

**அறிவுக் களஞ்சியம்**

**28**

(சி-90)

## வாக்காளர் இடாப்புகள்

கொழும்பிலுள்ள அரச நிறுவனங்களில் வைக்கப்பட்டிருக்கும் வாக்காளர் இடாப்புகள் அனைத்தும் தனிச் சிங்கள மொழியிலேயே இருக்கின்றன என்று அறிய வருகிறது. (க)

## SCIENCE COLLEGE

பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

By **MR. BRITTO**


★ G. C. E. A/L சித்தியடைந்தவர்களுக்கும்,
★ G. C. E. O/L பரீட்சை எடுத்தவர்களுக்கும்

உகந்தமுறையில் இலகு ஆங்கிலப் பேச்சு, இலக்கண வகுப்பு

ஆரம்பம்: **04 · 01 · 95**
இன்று பி. ப. 5-30

(அனுமதிகள் வழங்கப்படுகின்றன. நேர அட்டவணையை நிறுவனத்தில் பெறவும்) (சி-102)

## ஓராண்டு நினைவில்..



தோற்றம்: 30 — 05 — 1920

மறைவு: 16 — 12 — 1993

அமரர்

### நாகலிங்கம் சிவபாதசுந்தரனார்

திதி: 04 -01 - 1995

அன்பால் அனைவரையும் அரவணைத்து அன்பு மொழி பேசி, அறிவுரைகள் கூறி அறிவிற் சிறந்து பாரோர் போற்ற பல நூல்கள் எழுதி மாண்புடனே வாழ்ந்தாய்.

எங்கள் அன்புத் தெய்வமே! எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்டீர். ஆண்டு ஒன்று சென்றும் உமது அன்பை மறக்க முடியாமல் வாட்ட முறுகின்றோம் நாம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''தமிழ் நிலை''
தொல்புரம்,
சுழிபுரம். (34484)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 01 — 10 — 1911

உதிர்வு: 06 — 12 — 1994

### அமரர் கந்தையா இராமநாதன்

(ஓய்வுபெற்ற கச்சேரி லிகிதர்)

அன்பால், பண்பால், அறிவால், எங்களை வழி நடத்தி வாழ்வூட்டிய எமது அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்றாலும் எம் இதயத்தில் என்றும் இடம்பெற்று வாழ்வீர்களாக.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, எமது இல்லத்தில் நாளை (05 - 01 - 95) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி. மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வேல்வில்லா,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி. (34489)

## வெளிவந்து விட்டது!

### மெய்யியல் நோக்கு

**PHILOSOPHICAL JOURNAL**

அரையாண்டு இதழ்

ஒக். 94 — பெப். 95

மெய்யியல் ஆய்வாளர்களுக்கும், சிந்தனையாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும், மாணவர்களுக்கும் உரிய ஆய்வுநூல்

வெளியீடு:

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (34491)

## நில அளவையாளர்களுக்கான அறிவித்தல்

1. இதுவரை தம்மைப் பதிவு செய்யாத நில அளவையாளர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நில அளவைப் பிரிவினர் கேட்டுக் கொள்கின்றனர்.

   புதிதாகத் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் நில அளவையாளர் கீழ்க்காணும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   (அ) 10 வருடம் அரச நில அளவையாளராகவும், கனிஷ்ட பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் அல்லது 15 வருடம் அரச நில அளவையாளராகப் பணிபுரிந்தோர்.

   (ஆ) அரச அல்லது நீதிமன்ற ஆணைக்குட்பட்ட நில அளவை வேலைகளில் பிழை எனக் குற்றம் காணப்படாதவர்கள்.

   குறிப்பு:

   இனப்பிரச்சினை காரணமாக வேலையிழந்த நில அளவையாளரின் சேவை விசேட கவனத்திற்கு உட்படுத்தப்பட்டு அனுமதி வழங்கப்படும்.

2. ஏற்கனவே தம்மைப் பதிவு செய்த நில அளவையாளர்கள் 1995ஆம் ஆண்டுக்குரிய அனுமதி அட்டையை நேரில் சமுகமளித்துப் பெற்றுக் கொள்ளவும்.
3. இன்று முதல் தமிழீழ நீதிமன்ற ஆணைக்குட்பட்ட நில அளவை வேலைகள் தவிர்ந்த எந்தவொரு நில அளவை வேலைகளுக்கும் எமது முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.
4. எமது முன் அனுமதி பெறாமல் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நில அளவையும் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும்.
5. ஒரு நில அளவையாளரின் நில அளவை வேலைகள் வேண்டுமென்றே பிழையாக மேற்கொள்ளப்பட்டது என்று நிரூபிக்கப்படுமிடத்து அந் நில அளவையாளர் தண்டனைக் குட்படுத்தப்படுவதுடன் அவரின் அனுமதியும் ரத்துச் செய்யப்படும்.
6. மேற்கொள்ளப்படும் நில அளவையின் வரைபடப் பிரதியொன்று எமது பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
7. அனுமதி பெறவரும் நில அளவையாளர் தம்மிடமிருக்கும் நில அளவைக் கருவிகளின் முழு விவரங்களையும் தரும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அவ்வாறே நில அளவைக் கருவிகளை வைத்திருக்கும் எவரும் அதன் முழு விவரத்தை **31 — 01 — 1995** க்கு முன்னர் தந்து, பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிர்வாகம்,
நில அளவைப்பிரிவு,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

(சி-10144)

## 33-ம் நாள் நினைவஞ்சலி

(4 — 1 — 1995)



மலர்வு: 02 — 10 — 1949

உதிர்வு: 03 — 12 — 1994

### திருமதி கமலாதேவி பத்மநாதன்

அன்பே அம்மா!
பிஞ்சுக் குழந்தைகள் நாம் பிரிய ஏன் துணிந்தீர்
வஞ்சம் ஏது மறியோம் வழி காட்ட ஏன் மறந்தீர்
அன்புத் துணையாம் அப்பாவையும் மறந்தீரே
சொந்தத் துணையாம் சோதரரையும் துறந்தீரே
என்ன செய்வோம் ஏது மறியோம்
அன்னையே! தெய்வமாய் ஆறுதல் எமக்களிப்பீர்.

அன்பின் திருவே! சித்தி விநாயகப் பெருமானின் திருவடி நிழலில் உமது ஆத்மா அமைதிபெற வேண்டுகிறோம்.

கணவர், பிள்ளைகள்,
சகோதர, சகோதரியர், உறவினர்.

150/12 நெடுங்குளம் வீதி,
அரியாலை
யாழ்ப்பாணம். (34497)

## ST. JOHN'S INSTITUTE FOR CAREER GUIDANCE COMPUTER STUDIES

கீழ்வரும் பகுதிகளுக்கான புதிய வகுப்புக்கள் 07 — 01 — 1995 மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

1. G W BASIC (2½ Months)
2. PASCAL (3 Months) பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவருக்கு.

★ தமிழ் மாணவர்கள் கணனி அறிவில் பின் தங்கியவர்களாக காணப்படக்கூடாது என்ற நோக்கில் செயற்படுகின்றது.

பதிவாளர்,
பரி. யோவான் ஆலயம்.
சுண்டிக்குளி.

[சி-104]

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### உடைத்த கற்கள், மணல் வழங்கல் - 1995

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் விதிக்கப்பட்ட விவரப்பட்டியலுக்கு அமைவாக 150-225மி.மீ. (6''—9'') சக்கைக் கல்லும் 100 மி. மீ. (4'') 75மி. மீ. (3'') 50 மி. மீ. (2'') 37.5 மி. மீ. (1½'') 25 மி. மீ. (1'') 19 மி. மீ. (¾'') 12. 5 மி. மீ. (½'') அளவிலான உடைத்த கற்களும், மணலும் யாழ்ப்பாணம்/கிளிநொச்சி/மன்னார்/முல்லைத்தீவு/வவுனியா மாவட்டங்களின் வெவ்வேறு இடங்களில்வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநரிடமிருந்து விலைக்கேள்விகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் கோரப்படுகின்றன.

கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான பத்திரங்களை 04-01-1995 தொடக்கம் கீழ் ஒப்பமிடுபவரிடமிருந்து வழங்குநர் பெற்றுக் கொள்ளலாம்.

கீழ் ஒப்பமிடுபவரினால் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்வதற்கான கடைசித்தினம் 11-01-95 பிற்பகல் 4-15 மணி ஆகும்.

கேள்விப் பத்திரங்கள் ''உடைத்த கற்கள், மணல் வழங்கல்-1995'' என்று இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்ட கடித உறையிலிட்டு கீழ் ஒப்பமிடுபவரிடம் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படின் அவற்றை கீழ் ஒப்பமிடுபவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி - நா. செல்வரட்ணம்,
மாகாணப் பணிப்பாளர்,
வ. கி. (வடக்கு)

வீதி அபிவிருத்தி அதிகார சபை,
இல. 205, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். [சி-256]

## விக்னா கல்வி நிறுவனம்

52,ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

பிரிவு I

O/L **DAY CLASS**
(8மணி — 2மணி)

ஆரம்பம்: 05 - 01 - 1995
8 மணி

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
★ பாடசாலை செல்லாத மாணவர்களுக்கே அனுமதி
★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-100)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வையகம்: 07 — 06 — 1912

வானகம்: 27 — 12 — 1992

### அமரர் சரவணமுத்து கனகசபை

திதி: 04 - 01 - 1995

ஆங்கிரச வாண்டு மார்கழி நாள் ஆறிரண்டு
திங்கிலாப் பூர்வ சதுர்த்தியதில் - பாங்கினோடு
பல் வளமும் நிறைய வாழ்ந்த பாங்கார் - கனகசபை
எல்லையிலா வாழ்வடைந் தனனே.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (34402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## கிளாலித் திருட்டுக்கள்

கொழும்பிலும், வெளி மாவட்டங்களிலும் இருந்து குடாநாட்டுக்கு வரும் பயணிகளிடம் அடிக்கடி பணம் திருடிய நால்வர் குழு ஒன்றைப் பளை காவல்துறையினர் கடந்த சனிக்கிழமை கைது செய்திருக்கிறார்கள். இந்தத் திருடர் கோஷ்டியிடம் இருந்து இரண்டு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தைக் காவல்துறையினர் மீட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல நாள் திருடன் ஒருநாள் பிடிபடுவது நிச்சயம். எனவே இந்தத் திருடர் கோஷ்டி தனது ''தொழிலை'' நீண்ட காலமாக கிளாலி இறங்குதுறையில், மிக வெற்றிகரமாக நடத்தியிருக்கக்கூடிய சாத்தியம் நிறையவும் உண்டு.

இந்த நால்வர் குழு போன்று இன்னும் 'நாற்பது' திருடர் குழுக்கள் கிளாலி இறங்குதுறையில் நாளாந்தம் தங்கள் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருப்பர் என்று எண்ணுவதும் தப்பில்லை. அந்தளவுக்கு கிளாலி ஊடாகப் பயணம் செய்யும் பொதுமக்களின் உடைமைகள் நாளாந்தம் ''தொலைந்து'' போகின்றன.

பயணிகள் தமது உடைமைகளை, பொதிகளை இறங்குதுறையில் மட்டும் பறிகொடுக்கிறார்கள் என்பதில்லை. கிளாலியில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்வதற்கிடையில், வாகனங்களில் வைத்த பொதிகளைப் பறிகொடுக்கும் அவலமும் உண்டு. அத்தகைய சம்பவங்கள் பல நடந்திருக்கின்றன.

இறங்குதுறையில் திருடும் குழுக்களும், வாகனங்களில் எடுத்துவரப்படும் பொதிகளைத் திருடும் குழுக்களும் திட்டமிட்டுச் செயற்படுகின்றன என்பது நன்றாகப் புலனாகின்றது.

இவர்களைச் சட்டத்தின் பிடியில் கொண்டு வந்து தண்டிப்பதற்கு இரண்டு இடங்களிலும் கண்காணிப்பு நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

சில வாரங்களுக்கு முன்னர் பயணி ஒருவரின் நகைகளைத் திருடிய துணைப் படகோட்டிகள் கைது செய்யப்பட்டதனையும் இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமானதாகும்.

எனவே பயணிகளுக்கு ஏற்படும் உடைமை இழப்புகளுக்கு வெளியார் மட்டுமன்றி சேவையாளர்களும் காரணமாக இருக்கிறார்கள் என்பதனை நம்ப வேண்டி உள்ளது.

இது விடயத்தில் காவல்துறையினர் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும். பயணிகள்–மக்கள்– தமது உடைமைகளை இழப்பதைத் தடுப்பதற்கு கிளாலி இறங்குதுறையிலும், இப்பால் பயணத்தின் போதும்—வாகனங்களிலும்— கண்காணிப்புச் சோதனைகளை நிரந்தரமாக நடத்துவது அவசியமாகிறது.

பயணிகள் பிரயாணம் செய்யும், வாகனங்களில், பொதிகளுக்கு இலக்கமிட்டு, அவற்றுக்கான அடிக்கட்டைகளை கொடுத்து, அவர்கள் இறங்கிப் பொதிகளை சேகரிக்கும் போது சரிபார்ப்பதன் மூலம் வாகனங்களில் நடக்கும் திருட்டுக்களைத் தடுக்கலாம். இது விடயத்தில் சிற்றூர்திச் சங்கம் கவனம் எடுப்பது பயன்தரும்.

கிளாலிப் பயணம் எவ்வளவு சிரமமானது, கஷ்டமானது, களைப்பானது என்பது இப்போது மிகப் பலருக்கும் தெரிந்த ஒன்று. முந்திய அரசு செய்த கொடுமையினால் எமது மக்கள் போக்குவரத்திலும், பயணத்திலும் தேவையற்ற இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

அவை போதாது என்று— பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்ததுபோல— அவர்களது உடைமைகளை சொந்த மண்ணிலேயே திருடும் கூட்டங்களை அனுமதிக்கலாகாது. அவர்களைக் கண்காணித்து, கண்டுபிடித்து, தண்டித்து, ஒழுங்கை நிலைநாட்டி மக்களைக் காக்க வேண்டும். அவர்களது உடைமைகளைக் காக்கவேண்டும். இது குறித்து உடனடிக் கவனம் எடுக்க வேண்டியது தமிழீழ காவல்துறையினரின் பொறுப்பாகும்.

# அரச ஊழியர்கள் ஓய்வுபெற்றவுடன் முதல்மாதமே இளைப்பாற்று சம்பளம்

சேவையில் இருந்து ஓய்வு பெறும் அரச ஊழியர்கள் அவர்களின் சேவையின் இறுதித் தினத்திலேயே முதலாவது இளைப்பாற்றுச் சம்பளத்தையும், சேவையின் நன்மதிப்புப் பணத்தையும் அவர்கள் சேவை செய்த திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

சேவையில் இருந்து இளைப்பாறிய சிலர் தமது ஓய்வூதிய நலன்களை பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கும் சிரமங்களை முன்னிட்டு இந்த நடவடிக்கையை ஓய்வூதியத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இந்த வேலைகளை கம்யூட்டர் மயமாக்குவது பூர்த்தி அடைந்ததும், எதிர்வரும் மே மாதத்தில் இருந்து புதிய நடவடிக்கை அமுல் செய்யப்படும் என்று ஓய்வூதியத் திணைக்கள பணிப்பாளர் டபிள்யூ. பியசேன தெரிவித்தார்.

புதிய திட்டத்தின்படி சகல பிரதேச செயலாளர்களுக்கும் ஓய்வூதியத் திணைக்களத்துக்கும் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இளைப்பாறும் தினத்தில் சம்பந்தப்பட்ட ஊழியரின் பத்திரங்கள் யாவும் கோவைப்படுத்தப்பட்டு அவருக்கான முதலாவது கொடுப்பனவும் வழங்கப்பட்ட பின் குறிப்பிட்ட பத்திரக்கோவை சம்பந்தப்பட்ட பிரதேச செயலருக்கு அனுப்பிவைக்கப்படும்.

ஊழியருக்கு விருப்பமான செயலகத்தில் இருந்து அவருக்கான அடுத்த மாத கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் திரு. பியசேன கூறினார். [ஒ–3]

## எந்தவகை விசாரணைக்கும் நான் தயாராக உள்ளேன்

### பனை அபி. சபை முன்னாள்தலைவர்

கொழும்பு, ஜன. 4

எனக்கும், எனது சேவைக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தச் சிலர் முனைகிறார்கள்.

கொழும்பில் உள்ள சபைக் காரியாலயத்தில் எவரும் காரியாலய நேரத்தில் நேரில் சென்றால் எனக்கெதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எதிலும் சிறிதளவு உண்மையும் இல்லை என்பதனைப் புரிந்து கொள்ளலாம்.

எந்த வகையான விசாரணைக்கும் என்னை உட்படுத்தத் தயாராக உள்ளேன் என்பதனையும் பகிரங்கமாக இத்தால் அறிவிக்கிறேன்.

இவ்வாறு பனை அபிவிருத்தி சபையின் முன்னாள் தலைவர் திரு. க. நடராசா வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தமது ராஜினாமா குறித்து பத்திரிகைகளிலும், நாடாளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டவற்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே திரு. நடராசா இந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சர்வதேச மட்டத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தால் பனை அபிவிருத்தியின் செயற்பாடுகள் கணிக்கப்பெறவும், அதன் உதவியைப் பெறவும், பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாட்டை முன்னெடுத்துச் சென்ற எனக்கும், எனது சேவைக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தச் சிலர் முனைகின்றார்கள்.

அரசாங்கமும், அமைச்சரும் மாறும்போது சபைகள், கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற மரபுக்கு அமையவே எனது இராஜினாமா அமைந்தது. எவ்வித குற்றச்சாட்டுக்கள் காரணமாகவும் நான் பதவியிலிருந்து விலக்கப்படவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

பல்லாண்டு காலமாக கவனிப்பாரற்று இருந்த இயற்கை தந்த பனை வளத்தை பயனுறும் வகையில் வழிப்படுத்தி மக்கள் பங்களிப்புடன் அபிவிருத்தியை ஏற்படுத்தியும், பல்லாயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கவும் அயராது உழைத்த நான் எந்த வகையான விசாரணைக்கும் என்னை உட்படுத்த தயாராக உள்ளேன் என்பதையும் பகிரங்கமாக இத்தால் அறிவிக்கின்றேன்.

நன்றாக அபிவிருத்தி அடைந்துள்ள பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பதவியைப் பெறவேண்டும் என்ற அங்கலாய்ப்பில் ஒரு சிலரும், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மீது மனத்தாக்கம் கொண்ட சிலரும் தனிப்பட்டும், ஒன்றுகூடியும் தயாரித்து கையொப்பம் எதுவுமின்றி அனுப்பிய மொட்டைக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. உண்மைக்குப் புறம்பானவை— என்று கூறியுள்ளார். [அ]

## லீக்ஸ் அமோக விளைச்சல்

யாழ்ப்பாணம், ஜன .4

உரும்பிராய் அளவெட்டி, ஊரெழு போன்ற பகுதிகளில் லீக்ஸ் இம்முறை அமோக விளைச்சலை விவசாயிகளுக்கு ஈட்டி கொடுத்துள்ளது.

லீக்ஸ் இப்பகுதிகளில் அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

சந்தைகளில் ஒரு கிலோ லீக்ஸ் 50 ரூபாவாக விற்கப்படுகின்றது. (இ–17)

## 410 ஏக்கரில் உருளைக்கிழங்கு செய்கை

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்குச் செய்கையில் அபிவிருத்தி காணப்படுவதாக விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை 410 ஏக்கரில் உருளைக்கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளாலி பயணிகளுக்கு அனுபவம்

## நால்வர் சேர்ந்து ஓட்டோ பிடித்தனர்

### இடைநடுவில் ஒருவர் நழுவினார்

யாழ்ப்பாணம், ஜன. 4

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகள் தினமும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கொழும்பில் இருந்து வவுனியா வரும்போது ரயிலில் காடையர் தொல்லை ஒருபுறம்—

தாண்டிக்குளத்தில் படையினரின் கெடுபிடிகள் மறுபுறம், இவற்றை எல்லாம் கடந்து வந்தால் கிளாலியில் பொதிகள், காணாமற் போதல் அல்லது திருடப்படுதல் இப்படி எத்தனையோ தொல்லைகள்.

சமீபத்தில் கிளாலி மார்க்கமாக யாழ்ப்பாணம் வந்தோருக்கு இவற்றை எல்லாம்விட புதுவிதமான அனுபவம் ஒன்று ஏற்பட்டது.

கடந்த திங்கட்கிழமை நால்வர் ஒன்றாகச் சேர்ந்து ''ஓட்டோ'' ஒன்றை கிளாலியில் இருந்து யாழ்ப்பாணம் வரை ஏற்பாடு செய்தனர்.

''ஓட்டோ'' சாரதி 1200 ரூபா கேட்டதால் ஆளுக்கு 300 ரூபா கொடுப்பது என்று ஏற்பாடாகியது—

கொடிகாமத்தில் தேநீருக்காக ''ஓட்டோ'' நிறுத்தப்பட்ட சமயம் இந்த நால்வரில் ஒருவர் மெதுவாக நழுவி விட்டாராம்.

யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தபோது ஏனைய மூன்று பயணிகளும் வேறு வழிஇன்றி ஆளுக்கு 400 ரூபா செலுத்த வேண்டி ஏற்பட்டது. (இ–க)

## 2லட்சம் போத்தல் கள்ளு அடைப்பதற்கு திட்டம்

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டு வரும் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையில் இவ்வருடம் இரண்டு லட்சம் போத்தலில் கள் அடைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

போத்தல் கள் சேதாரம் அடைவதாலும், புதிய போத்தல்கள் பெறுவது சிரமமாக இருப்பதாலும் கடந்த 1994 ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலையில் 79 ஆயிரம் போத்தல் கள் அடைக்கப்பட்டதாகவும் —

இதற்குப் பலத்த மவுசு இருப்பதால் அனைத்தும் விற்பனையாகி விட்டதாகவும் மேற்படி சங்கத் தலைவர் திரு. மு. கணேஷ் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இச்சங்கத்தின் தொழிற்சாலையில் வருடாந்தம் ஒரு லட்சம் போத்தல்களில் கள் அடைக்கப்பட்டு வந்ததாகவும் —

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் இந்த போத்தலில் அடைக்கப்படும் கள்ளுக்கு பலத்த கிராக்கி இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ–135)

## கடல்வளம் பாடமாகிறது

வல்வை சிதம்பராக்கல்லூரியில் 1995 ஆண்டு பாடசாலை முதலாந்தவணை முதல் தொழில் முன்னிலைப்பாட நெறியில் புதிதாக கடல்வளத்துறையும் பாடமாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.

மேற்படி பாடத்திற்கான சகல வசதிகளையும் வல்வை மீனவர் சங்கம் உதவுகின்றது.

## மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள்

வடமராட்சி, ஜன. 4

யாழ். குடாநாட்டிலுள்ள சில பாடசாலைகளில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமம் இவ் வாரம் முதல் பாடசாலை உபகரணங்களை இலவசமாக வழங்கவுள்ளது.

புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தாக் கல்லூரி, மட்டுவில் அரசினர் வித்தியாலயம் குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கற்கோவளம் மெ.மி. பாடசாலை, பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரி, அல்வாய் சுப்பிரமணிய வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கே உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

## காய்ச்சல் பற்றிய ஆய்வு

வலிகாமம் தெற்கு, ஜன. 4

அண்மைக் காலத்தில் திடீரென பரவி வரும்காய்ச்சல் நோய் பற்றியஆய்வொன்றினை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள் மற்றும் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் ஆகியோர் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் வீடு, வீடாகச் சென்று சுகாதார ஆய்வினையும் இரத்தப் பரிசோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (க–152)

## 4 அமைச்சர்கள் வெளிநாடுகளில்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுமுறையில் வெளிநாடு சென்ற அதேவேளை, பல அமைச்சர்களும் வெளிநாடுகளுக்கு பயணமாகியுள்ளனர்.

அமைச்சர்கள் மங்கள சமாவீர, நிமால் ஸ்ரீபால டி சில்வா, திருமதி. சிறிமா வி அத்துலத் முதலி ஆகியோரே வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். (உ)

# நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படுமுன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்

சிறுபான்மை இனத்துக்கு துரோகம் செய்த சரித்திர நாயகர்களின் பெயர் பட்டியலில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பெயர் இடம் பெறவே கூடாது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் இருபது லட்சம் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியடைந்த ஜனாதிபதி சந்திரிகா, இனப்பிரச்சினைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அது எந்த விலை கொடுத்தும் தீர்க்கப்படும் என ஆணித்தரமாக மேடைகள், தொலைக்காட்சிகளில் முழங்கியவர்.

இதன் பிரதிபலிப்பு காரணமாக கிட்டத்தட்ட 10 லட்சம் சிறுபான்மை வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை அள்ளி வீசினார்கள்,

கடந்த 17 வருட கால ஆட்சி களைப்பில் மாற்றம் ஒன்று தேவை என வாக்களித்தார்கள் பெரும்பான்மை இனமக்கள். ஆனால் சிறுபான்மை இனமக்களோ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக கூறியதற்காகவே ஜனாதிபதி சந்திரிகாவை ஆதரித்தார்கள்,

சிறுபான்மை மக்களின் 10 லட்சம் வாக்குகள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கிடைத்திருக்காவிடின் அவர் ஜனாதிபதி என்ற பதவியை அண்மித்திருக்கவே முடியாது. ஏனெனில் ஜனாதிபதி சந்திரிகா 47 லட்சம் வாக்குகளை பெற்றிருந்தார். திருமதி சிறிமா திஸநாயக்க 27 லட்சம் வாக்குகளை பெற்றிருந்தார். சிறுபான்மை மக்கள் தங்களது 10லட்சம் வாக்குகளை மாறிப் போட்டிருந்தால், சிறிமா 37 லட்சம் வாக்குகள் பெற்றதைப் போல் ஜனாதிபதி சந்திரிகாவும் 37 லட்சம் வாக்குகளையே பெற்றிருப்பார்.

எனவே ஜனாதிபதி சந்திரிகா சிறுபான்மை இனமக்களின் முற்று முழுதான வாக்குகளினாலேயே ஜனாதிபதி என்ற பதவியை அலங்கரிக்கின்றார் என்பது மறுக்க முடியாததொன்று.

### பொருளாதாரத்தடை

ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் தூதரக தொடர்புகளை முறித்து அந்த நாட்டுக்கெதிராக பொருளாதாரத்தடை விதிக்கலாம். ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை ஒரு நாட்டுக்கெதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு முன் அந்நாட்டுக்கெதிராக பொருளாதாரத்தடை விதிக்கின்றது. இன்று ஈராக், லிபியா மீதான பொருளாதாரத் தடைகள் மேற்கூறிய இரண்டாவது ரகத்தை ஒத்தவை.

## தவறினால் 'பிச்சைக்காரன் புண்'ணை ஒத்ததாகிவிடும்

ஆனால் உள்நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பொருளாதாரத் தடை விதிக்கப்படுவது உலகில் முதன்மையானதும் இறுதியானதுமான ஒரே நாடு இலங்கை என்ற பெயரைப் பெறுகிறது. இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணம் மோசமான பொருளாதாரத் தடைக்கு கடந்த 4 வருடங்களாக இலக்காகியுள்ளது.

அங்கு 8 லட்சம் மக்கள் வசிக்கின்றார்கள். அகதிகள் அகதிமுகாம்களில் நிறைந்து வாழ்கின்றார்கள். சொந்த மக்களைப் பட்டினிபோட்டு, பொருளாதாரத் தடை மூலம் ஆரோக்கியத்தைக் கெடுத்து, மக்களின் அதி 'உயர் உயிர் வாழ் உரிமையை' மீறி செயற்பாடுகள் அரங்கேறுகின்றன.

இந்தப் பொருளாதார தடை உடனடியாக நீக்கப்பட்டு போதியளவு பொருள்கள் யாழ்ப்பாணத்தில் கிடைக்கச் செய்வதே ஜனாதிபதியின் சரியான செயற்பாடாக இருக்க வேண்டும். ஏனெனில் அவசிய அத்தியாவசிய தேவைகளை உடனடியாகச் செய்து மக்கள் நம்பிக்கையை அரசாங்கம் பெறவேண்டும்.

இந்த பொருளாதார தடையின் நோக்கம் என்ன?

தடைப்பொருள்களான பெற்றோல், பற்றறி, யூரியா, கற்பூரம், 'ஷொப்பிங் பேக்' இன்னும் பல பொருள்கள் வெடிப்பதார்த்தங்கள் செய்வதற்கு பிரயோகிக்கப்படுகின்றன என்பது அரசாங்கத்தின் கருத்து. உண்மையாக இருக்கலாம். ஆகவே இவை கொழும்பிலிருந்து வடபகுதிக்கு கொண்டுசெல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது.

இங்கு எழும் கேள்வி யாதெனில் அங்கு போர் முனையில் பாவிக்கப்படும் துப்பாக்கிகள், இயந்திர துப்பாக்கிகள், பீரங்கிகள் என்பன கொழும்பிலிருந்தா கொண்டுசெல்லப்பட்டன.

இத்தகைய கடுமையான ஆயுதங்களைப் பெற்று போராடும் குழுவுக்கு மேற்கூறிய பெற்றோல், கற்பூரம், தீப்பெட்டி, மெழுகுதிரி என்பவற்றைப் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலையா ஏற்படும்?

இந்தபொருளாதாரத் தடையினால் அரசாங்கம் சாதித்தது என்ன? மக்களைக் கொடுமைப்படுத்தியதைத் தவிர அரசாங்கம் சாதித்தது வேறொன்றும் இருக்க முடியாது.

### பேச்சுவார்த்தை

ஆறாவது திருத்தச் சட்டத்தின் மூலம் நாடாளுமன்றக் கதிரைகளை எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் விட்டெறிந்து சென்ற பின்னர் முதலாவது பேச்சு வார்த்தை பூட்டானின் தலைநகர் திம்புவில் நடைபெற்றது.

பின்னர் பெங்களூர், டில்லி என வலம் வந்தது.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் 1989 – 90 ஆம் ஆண்டுகளில் [illegible] பிரேமதாச அரசாங்கத்துடன் கொழும்பில் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

ஆனால் இலங்கையின் இன விடுதலைப் போராட்டம் ஆயுத வடிவம் பெற்ற பின்னர் வடபகுதி யாழ்ப்பாணத்தில் பேச்சு வார்த்தை நடத்தப்படுவது இதுவே முதன் முறையாகும்.

''அட்டமி நவமி தொட்டது நாசம்'' என்ற முதுமொழிக்கேற்ப ஐப்பசி 13 ஆம் திகதி ''அட்டமி'' அன்று யாழ். வளாக திடலில், இலங்கை விமானப் படை வானூர்தி முத்தமிட்டது. ''நவமி''யில் பேச்சு வார்த்தை ஆரம்பமானது.

ஆனால் அன்று சரஸ்வதி பூசை இறுதிநாள் என அரசாங்கம் தேர்ந்தெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ''அட்டமி'' தனது செயற்பாடுகளை காட்டத் தொடங்கிவிட்டது. அடுத்த கிழமை வருகிறோம் எனக் கூறிவந்த தூதுக்குழு இனி ''எப்பொழுது'' செல்லுவோம் என்ற நிச்சயமற்ற நிலைமை மாறி வருகின்றது.

### குடியேற்றமே காரணம்

இன்றைய போராட்டத்துக்கு திருமலை திட்டமிட்ட குடியேற்றமே காரணமாகும். கிழக்கில் தமிழ் மக்கள் சிறுபான்மையாகும் நிலை. வடக்கு – கிழக்கை துண்டாக்கும் வெலிஓயா குடியேற்றம் முதன்மை வகிக்கின்றது. அன்றிலிருந்து இன்று வரை வடபகுதி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாலேயே அலங்கரிக்கப்படுகின்றது. ஆகவே அங்கு அதிகாரப்பரவலாக்கலே அவசிய தேவைப்பாடாகின்றது. ஆனால் கிழக்கில் மண் போய், இன்று மக்கள் மண்ணை விட்டுப் போகும் நிலைமையே காணப்படுகின்றது.

எமது கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர் குறையாவிட்டாலும் பெரும்பான்மை இனமக்களின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. இதற்கு திட்டமிட்ட குடியேற்றமே காரணமாகும். கிழக்கில் அதிகார பரவலாக்கலுக்கு முன்னர் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த மண் ஆக்கிரமிக்கப்பட்டு, சொந்த மக்கள், சொந்த மண்ணில் வாழ முடியாது அகதியாக வாழும் நிலையே ஏற்பட்டுள்ளது.

இதன் தாற்பரியமே வடக்கும் – கிழக்கும் இணைந்து ஓர் அலகாக இருக்க வேண்டும் இல்லையேல் எமது கிழக்கு வாழ் தமிழ் மக்கள் இன்று அகதிகள், எதிர்காலத்தில் அநாதைகளாகி விடுவார்கள். இது யதார்த்தம் உணர்த்தும் உண்மை.

ஆரம்ப பேச்சுவார்த்தை அமைதியாக முடிவுற்றது. போர் நிறுத்தம் வரும், அகதிகள் மீள குடியமர்த்தப்படுவார்கள். கடல் வலய தடை நீங்கும், பாதை திறக்கப்படும் என்பனவற்றை தமிழ் மக்கள் எதிர்பார்த்த வண்ணமுள்ளார்கள். மீண்டும் பேச்சு வார்த்தை எப்போது என அங்கலாய்க்கின்றார்கள்.

### ஜனாதிபதி முறை ஒழிப்பு

ஜனாதிபதி சந்திரிகா 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் என பிரசாரங்களின் போது கூறியிருந்தார். அந்த ஜனாதிபதி முறை ஒழிப்புக்கு முன்னர் இனப்பிரச்சினை தீர்வு காணப்படுவது அவசியமாகும். ஜனாதிபதி தனது ஜனாதிபதி அதிகாரங்களைப் பயன்படுத்தி இனப்பிரச்சினையை தீர்க்கலாம்.

இன்று நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதியாக இருப்பவர். ஜூலை 15 இன் பின்னர் ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்ட பின்னர் (ஒழிக்கப்பட்டால்) அறுதிப் பெரும்பான்மையே இல்லாதுநாடாளுமன்றத்தின் பிரதமராக வந்து பிரச்சினையை அணுகுவதே மிகச் சிரமமாக இருக்கும்.

இன்று இனப்பரம்பலுக்கான அதிஉயிர் அமைச்சராக இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு தனித்துவமும். பிரத்தியேகமுமான அதிகாரத்தைக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி முறை ஒழிப்புக்கு பின்னர் இனப்பரச்சினையை தீர்க்க உள்ள அதிகாரம் நாடாளுமன்றத்தின் கைக்குச் சென்று விடும். நாடாளுமன்ற முறைமையினாலோ அல்லது ஜனாதிபதி முறைமையினாலோ இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என தமிழ் மக்கள் நம்பவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா என்ற தனிச்சக்தி பிரச்சினையை தீர்க்கவே மக்கள் ஒத்துழைத்தார்கள் என்றே கூறவேண்டும். சுருங்கக் கூறின் ஜனாதிபதி முறை ஒழிப்புக்கு முன் இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் அது பின்னர் பிச்சைக்காரனின் புண்ணை ஒத்தாகிவிடும்.

### போர் நிறுத்தம்

எனவே மக்களின் எதிர்பார்ப்பான போர் நிறுத்தத்தை செய்து ஆயுத நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து மீண்டும் பேச்சுவார்த்தை களைசட்ட வேண்டும். ''போர் நிறுத்தமில்லாது பேச்சுவார்த்தை ஒன்றும் சாதிக்கமாட்டாது'' என்பது உலக நிலைப்பாடு.

ஏனெனில் ஒரு பெரிய தாக்குதல் இடம் பெற்றால் பேச்சுவார்த்தை கருத்து முரண்பாட்டுடன் முடிவுக்கு வந்துவிடும்.

நன்றி
வீரகேசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்றைய பேச்சுவார்த்தைகளின் பின்னர் விடுவிக்கப்பட்ட நான்கு பொலிஸாரும் அரசுத் தூதுக்குழுவினர் மூவருடனும் செஞ்சிலுவைச் சங்க சர்வ தேசக்குழுப் பிரதிநிதியுடனும் மேசையில் அமர்ந்திருக்கின்றனர்.

## புலிகளிடம் போர்க் கைதிகளாக உள்ள
# கடற்படை அதிகாரிகளுடன் அரச குழுவினர் மதிய உணவு

யாழ்ப்பாணம், ஜன. 4

கற்பிட்டியில் ''சாகரவர்த்தனா'' கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவத்தில், விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட கடற்படை அதிகாரிகளான போர்க் கைதிகள் இருவருடனும் யாழ்ப்பாணம் வந்த அரச பிரதிநிதிகள் குழுவினர் நேற்று மதிய உணவு உண்டனர்.

யாழ்ப்பாணம் வந்த இராணுவ கடற்படை அதிகாரிகள் இருவரும் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு கடற்படை அதிகாரிகளுடன் அளவளாவி உரையாடி அவர்கள் நலன்கள் பற்றி கேட்டறிந்தனர். (அ-3-9)

## இன்று கிளாலி - பூநகரி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஜன. 4

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ-3)



அரசுத் தரப்பு பிரதிநிதிகள் குழுவில் மூவர் பேச்சுவார்த்தை மேசையில். இடமிருந்து வலமாக கப்டன் பிரசன்னா ராஜரட்ன, மேஜர் ஜெனரல் சிறி பீரிஸ், அரசுத் தரப்பு பிரதிநிதிகள் குழுத்தலைவர் குசும்சிறி பாலபட்டபெண்டி.

# 4,000 கோடி ரூபா செலவில் வடக்கு புனரமைக்கப்படும்

## புலிகளின் பரிசீலனைக்குத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 4

நேற்று நடந்த பேச்சுக்கள் வெற்றியளிக்கக் கூடியதாக அமைந்திருந்தன. மோதல் தவிர்ப்புக் குறித்து அறிவிப்பை ஜனாதிபதி சந்திரிகா விரைவில் விடுப்பார் என்று அரச குழுவில் இடம்பெற்று வந்த திரு. ராஜன் ஆசீர்வாதம் உதயனுக்குத் தெரிவித்தார்.

பூநகரிப் பாதையைத் திறப்பதற்காக, இராணுவத்தை வாபஸ் பெறுவது குறித்து ஜனாதிபதியுடன் பேசவிருக்கிறோம் என்றும் அவர் கூறினார்.

மோதல் தவிர்ப்பு குறித்து ஜனாதிபதி நாளை (புதன்) அறிவிப்பார்.

வடக்கின் புனர்நிர்மாண வேலைகளை மேற்கொள்வது தொடர்பாக விடுதலைப் புலிகளிடம் அறிக்கை ஒன்றைக் கொடுத்துள்ளோம். அதுபற்றி அடுத்த கட்டப் பேச்சில்முடிவு செய்வோம்.

புனர்நிர்மாணவேலைகளுக்கு 4,000 கோடி ரூபா செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மின்சாரம், வீதி திருத்தம், கட்டட அமைப்பு போன்ற திட்டங்கள் அதில் அடங்கும்—

கடல் வலயத் தடைச் சட்டம் தொடர்பாக நேற்றைய பேச்சில் ஆராயப்பட்டது. ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து இது தொடர்பான அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் — என்றும் திரு. ஆசிர்வாதம் தெரிவித்தார்.

இரண்டு வாரங்களில் மீண்டும் இதே குழுதான் பேச்சுக்கு வருமா என்பதை தற்போது கூறமுடியாது. சில சமயம் ஜனாதிபதி குழு உறுப்பினர்களை மாற்றலாம் — என்று கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் திரு. ராஜன் கூறினார். (அ-3)

## இருபடை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையிலேயே பலாலி திரும்பியது.

அதே போன்று மாலையில் அரச பிரதிநிகளை ஏற்றுவதற்காக வந்தபோதும் மிகவும் தாழப் பறந்தது. (2-3-9)

## கண்ணீர் அஞ்சலி

### க. இளையதம்பி

(அதிபர் யா/ கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை)

எமது பாடசாலை அதிபர் திரு. க. இளையதம்பி அவர்கள் அமரத்துவம் அடைந்தமைக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (04-01-95) மு. ப. 8-00—9-00 மணி வரை பாடசாலையில் அஞ்சலிக்காக அன்னாரது பூதவுடல் வைக்கப்படும்.

பிரதி அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/ கைதடி நுணாவில் அ. த. க, பாடசாலை,
சாவகச்சேரி.

(34508)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு கனகசபை

மண்டைதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடியில் வசித்தவருமாகிய சின்னப்பு கனகசபை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னப்பு சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், ஜெயலெட்சுமி, சண்முகராசா (பனை அபிவிருத்திச் சபை), கனகசபாபதி (அவுஸ்திரேலியா), பரமேஸ்வரன், சிறீஸ்காந்தலட்சுமி, மதியழகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மாணிக்கவாசகர், ஜெயபாலேஸ், காலஞ்சென்ற லலிதாதேவி ஆகியோரின் மாமனாரும், தற்சுதன், கஜேந்த், மனோசங்கர், வரதராஜன் (வரதன்), உதயராஜன் (பார்த்தீபன்), தவபாலினி, தவராஜன், விமலராஜன், பிரதீபன், காலஞ்சென்ற தர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சட்டநாதபிள்ளை, பொன்னம்பலம், திருமேனி, தங்கம்மா, மகாலெட்சுமி, இராசம்மா, செல்லம்மா, சிங்கரத்தினம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4-1-95) பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க. சண்முகராசா
(மகன்)

125/133, வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(34518)

மேலும் மரண அறிவித்தல்கள் 4ஆம் பக்கத்தில்

## சென். ஜோன்ஸ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வட்டமிட்டு விளையாட்டரங்கில் இறங்கியது.

ஹெலியில் இருந்த இரு விமானிகளும் முதலில் இறங்கி ஹெலியின் கதவுகளைத் திறந்ததும் ஒரு பக்கக் கதவால் முதலில் கடற்படை அதிகாரி கப்டன் பிரசன்னா ராஜரட்ன இறங்கினார்.

மறுபக்கக் கதவால் குழுவின் தலைவரும், ஜனாதிபதியின் செயலாளருமான பாலபட்டபெண்டி இறங்கினார். அவரைத் தொடர்ந்து இராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் சிறி பீரிஸ் இறங்கினார்.

அதைத் தொடர்ந்து குழுவின் ஏனைய உறுப்பினர்களான நவீன் குணரத்தின, ராஜன் ஆசீர்வாதம் ஆகியோர் இறங்கினர்.

விடுதலைப்புலிகளின் குழுவில் அங்கம் வகிக்கும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன், துணை அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன், திரு. இ. இளம்பரிதி, திரு. சு. டொமினிக், திரு. ரவி ஆகியோர் அவர்களை கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி மேரிபேர்கின்ஸ்ும் அங்கு சமுகமளித்து அரச பிரதிநிதிகளை வரவேற்றார்.

அதையடுத்து விடுதலைப் புலிகளின் கொமாண்டோ படையினரின் திறந்த ஜீப் முன்னே செல்ல, பிரதிநிதிகள் புலிகளின் இரு இராணுவ வாகனங்களில் பேச்சுக்கள் நடைபெற்ற சுண்டிக்குளி அரசியல்துறை தலைமையலுவலகத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

அவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட பாதைகளில் வீதிகளில் இருமருங்கிலும் கூடியிருந்த மக்கள் கை அசைத்து அரச பிரதிநிதிகளை வரவேற்றனர்.

## படப்பிடிப்பாளர் வந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 4

அரசு குழுவுக்கும், விடுதலைப்புலிகள் குழுவுக்கும் இடையில் நேற்று நடந்த பேச்சுக்களின் நிகழ்வுகளை வீடியோ படம் எடுக்க இரு படப்பிடிப்பாளர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் தகவல் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த செய்தியாளர்களே அந்த இருவரும் ஆவர்.

உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்கள் எவரும் நேற்று யாழ். வரவில்லை. (அ-3)

## சிறுவன் காயம்

யாழ். கோட்டைப் பகுதியிலுள்ள கட்டட மேல்மாடியில் இருந்து தவறி விழுந்து சிறுவன் ஒருவன் காயமடைந்தான்.

நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொடிகாமம், கச்சாயைச் சேர்ந்த பி. விக்னேஸ்வரன் (வயது 14) என்ற சிறுவனே படுகாயமடைந்தவன் ஆவார். இவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ஓ-15)

## பீடாரோஹணம்

இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின் பீடாரோஹண விழா நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1-30 மணி முதல் சிவஸ்ரீ அ. மகேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இலங்கை இந்து மத குருமார் ஒன்றியம் இவ்விழாவை ஒழுங்கு செய்துள்ளது.

## புலிகளின் குரல் வானொலியில்

### 04 — 01 — 1995
### புதன் இரவு

- ★ 8-01 — புரட்சிக்குரல்
- ★ 8-05 — கலைமஞ்சரி— நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம். அறிமுக மாகுபவை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் வெளியிடப்பட்ட 'சுவடுகள்', 'இதயநாதம்', 'எங்கள் தாய்த் திருநாடு' ஆகிய மூன்று நூல்கள். அதனையடுத்து சிறுகதை - வானோசை 4 இல் முதலாவது பரிசு பெற்ற த. சங்கீதன் எழுதிய ''ஆரம்பம்'', சிறுகதையைத் தொடர்ந்து கவிதை - வானோசை 4இல் முதலாவது பரிசுபெற்ற செல்வி பாரதிப்பிரியா எழுதிய ''புதிய சூரியர் உதயமாகிறார்''
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம்- இ. இராஜேஸ்வரன் எழுதிய ''அனுவதி''
- ★ 8-50 — சித்த மருத்துவக் குறிப்புகள்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### 05 — 01 — 1995
### வியாழன் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 —விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப் பாடல்கள்
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## தமிழீழ வானொலி
### புதன் மாலை ஒலிபரப்பு

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — படப்பாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு
- ★ 6-30 மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## பாப்பரசர் விஜய காலத்தில் பாதையை திறக்க வாய்ப்பு

### பாலபட்டபெண்டி தகவல்

பாப்பரசரின் இலங்கை விஜய காலத்தில், வடக்கிற்கான— பாதுகாப்பான— தரைவழிப்பாதை ஒன்று திறப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும்.

—இவ்வாறு யாழ் சென்று திரும்பிய அரசுத் தூதுக்குழுவின் தலைவர் பாலபட்டபெண்டி தெரிவித்தார்.

பேச்சுக்களின் பின்னர் நேற்று மாலை கொழும்பு திரும்பியதும் இரத்மலானை விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் குறிப்பிட்டதாவது:-

பாதை திறப்பது தொடர்பாக இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இரண்டு பாதைகள் உள்ளன. ஒன்று சங்குப்பிட்டி— பூநகரிப் பாதை. மற்றையது ஆனையிறவுப் பாதை.

பாப்பரசரின் விஜய காலத்தில் ஏதேனும் ஒரு பாதுகாப்பான பாதை திறந்து விடப்படும் வாய்ப்புகள் உள்ளன.

தமிழ் மக்களின் புனர்வாழ்வுக்கு 3 ஆயிரத்து 900 கோடி ரூபா செலவிலான புனரமைப்புத் திட்டம் ஒன்று அரசிடம் தயாராக உள்ளது. அதனை எந்த நேரத்திலும் மேற்கொள்ள அரசு தயாராக உள்ளது. அத் திட்டத்தை புலிகள் பரிசீலிக்க வேண்டியும் இருக்கிறது.

யுத்த நிறுத்தம் தொடர்பாக புலிகள் சாதகமான பதிலைத் தந்துள்ளார்கள் அதனை அரசிடம் தெரிவிப்போம்—என்றார். (உ-3-6)

## மோதல் தவிர்ப்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

போது ஆரம்பிப்பது என்பது குறித்து அரசு இன்று அல்லது நாளை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் பின்னர் விடுதலைப் புலிகளும் மோதல் தவிர்ப்புக் குறித்து அறிவிப்பர்.

நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, யாழ்ப்பாண குடாநாட்டுக்கு போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறப்பது குறித்தும் ஆராயப்பட்டது. எனினும் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லை.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்தும் நேற்று வலியுறுத்தப்பட்டது.

வடக்கைப் புனரமைப்பதற்கான சுமார் 4,000 கோடி ரூபா செலவிலான திட்டம் ஒன்றை அரச தரப்புப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தனர்.

அன்றாடப் பிரச்சினைகளை தீர்த்துக் கொண்டே, அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து பேச வேண்டும் என்பதனை விடுதலைப் புலிகள் பலமாக வலியுறுத்தினர்.

யாழ். றோட்டறிக் கழகம்

இன்ரறக்ட் தலைவர்களுக்கான கூட்டம்

இடம்: யாழ். இந்துக் கல்லூரி
காலம்: இன்று [புதன்கிழமை] 4 - 1 - 1995 பி. ப. 4 மணிக்கு

★ இன்ரறக்ட் கழகங்களின் தலைவர்களும் செயலாளர்களும் கலந்து கொள்ளவும்.

செயலாளர்,
யாழ். றோட்டறிக் கழகம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-108]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04—01—1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.